1411

REGISTERED No. M. 6165. ந. பை. 13

பத்ஹுல் இஸ்லாம்

FATH-HUL-ISLAM

மாத பத்திரிகை

ஏப்ரல்—1958.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
31 MAR 1958
MADRAS

விஷயம்.	பக்கம்.
இஸ்லாமிய விரதமும் வணக்கமும்	1
மறுலோக காணயப் பிரிவார்த்[illegible] (ரஹ்மத் பாகவி)	9
மாபெரும் அறிஞரின் மகத்தான சேவை (டி. எப். ஆர். மஆலி ஸாஹிபு-பாகவி)	11
நோன்பு நோற்றிடுவோம் (கும்மிடி பூண்டி. ப. தா. ஷாஹுல் ஹமீத்)	16
மாநிலம் மறக்க முடியாத மாவீரர்	17
சிறைப் பறவை சிப்கத்துல்லா் அல்லது தப்பு துலக்கிய தூயவர்	21
தொழுகை பற்றிய சில ஹதீது ஆதாரங்கள் (டி. எப். ஆர். மஆலி ஸாஹிபு-பாகவி)	29

…ல் இஸ்லாம் ஆபீஸ்:
…ஹரோட், திருவல்லிக்கேணி,
மதராஸ் 5.

SL
Q7ணு211, N24ET
X158
187023

பத்ஹுல் இஸ்லாம்.

சந்தா விபரம்:	இந்தியா, பாகிஸ்தான், ஸிலோனுக்கு		
	வருஷ சந்தா	ரூ.	1–50
	தனிப் பிரதி நயா பைஸா		0–13
	மற்ற வெளி நாடுகளுக்கு வருஷ சந்தா	ரூ.	2–00

எல்லா ஊர்களிலும் ஏஜெண்டுகள் தேவை. எல்லா விஷயங்களுக்கும் கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

மானேஜர்,
பத்ஹுல் இஸ்லாம்,
20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதருஸ் 5.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் குர்ஆனின் நல்லுபதேசமும்

(முதல் பதிப்பு)

இதில் நமது நாயகம் முஹம்மது (ஸல்) அவர்கள் அவதரித்தது முதல் வபாத்து வரை சுருக்கமாக விபரித்து எழுதப்பட்டுள்ளது. இத்துடன் நாயகம் (ஸல்) அவர்கள் தமது உம்மத்துமார்களுக்கு மொழிந்தருளிய உபதேசங்களும், குவலயத்தோர்க்கு குர்ஆன் ஷரீப் கூறும் செய்திகளுள் சிலதும் சேர்க்கப் பட்டுள்ளன. 115 பக்கங்கள் கொண்டது.

விலை ரூ. 1–00

கிடைக்குமிடம் :—

ஹாஜி எம். ஏ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்
நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதருஸ் 5.

பத்ஹூல் இஸ்லாம்

ஏப்ரல்—1958.

இஸ்லாமிய விரதமும் வணக்கமும்

இஸ்லாமிய வணக்கங்களில் எது முதன்மையானது? எது முக்கியத்துவமற்றது? என்று பிரித்துணர்வது கூடாது. ஒவ்வொரு வணக்கமும் அதனதன் தத்துவார்த்தப் பரம ரகசியத்தைக் கொண்டே பிரதான்யம் பெற்று விளங்குகின்றது.

உதாரணமாக: தற்போதிய புனித மாதமான ரமலானின் நோன்பு என்னும் விரதத்தை எடுத்துக் கொள்வோம். ஈமான் கொள்ளும் திருக் கலிமாவுக்கு அடுத்தபடியாய் தொழுகை, ஜக்காத்து கணிக்கப்பட்டு பிறகே நோன்பு கணிக்கப்படுகிறது. ஆனால், நோன்பின் தத்துவத்தையும் பரம ரகசியத்தையும் உற்றுணர்ந்து பார்க்கு மிடத்து, புனித நோன்பு-விரதமே தொழுகையை விடவும் ஜக்காத்தை விடவும் முதன்மையானதாய் கணிக்கப்பட வேண்டிய தாகும்.

இஸ்லாமிய சன்மார்க்கச் சூரியன், தன்னுடைய ஆத்மார்த்தப் பரம இளஞ்சுடரை மெல் லென வீசி வியாபிக்கத் தொடங்கிய ஆரம்ப காலத்திலே, அல்லாஹ்—ரஸூல் மீது நன்னம்பிக்கைக் கொண்டதற்கு அடுத்த படியாய், முதன்மையாய், முஸ்லிம்கள் மீது கடமையாக்கப்பட்டது தொழுகையேயாகும்.

தொழுகை, ஒரு சர்வ சாதாரண வணக்க முறை யாகும். அதில் தக்பீர் உண்டு, தஹ்லீல் உண்டு, கிராஅத் உண்டு; மற்றும் சரீர உழைப்பும் அங்க அசைவும் உண்டு.

தொழுகையின் அனுஷ்டான விதம், பிறர் மனதை கவரத் தக்க தாகும். தொழுதுக் கொள்வோரைக் கண்டால், தொழாமல் இருப் போரும் மனோ உணர்ச்சி வசப்பட்டு, பயபக்தி செய்ய வேண்டியதா கிறது.

இஸ்லாமிய ஆரம்ப காலம், மக்கா நகரில் தான் நிகழத் தொடங்கியது. அக்காலத்தில், முஸ்லிமகள் இஸ்லாமிய வணக்க ஒழுக்க முறைகளை அனுஷ்டிப்பதில் காபிர்களால் இடையூறுகளும் எதிர்ப்பும் புரியப்பட்டு வந்தன. மக்கத்துக் காபிர்கள், முஸ்லிம்கள் குர்ஆன்ஷரீபின் வாக்கியங்களை எழிலுடன் ஓதுவதைக்கண்டு கேட்டு அச்சமும் திடுக்கமும் கொண்டு, எதிர்ப்புகள் புரிந்து வந்தார்கள்; தடைகள் விதித்து வந்தார்கள்.

ஹஜ்ரத் அபூபக்கர் ஸித்தீக் (ரலியல்லாஹு அன்ஹு) அவர்கள், தங்கள் தொழுகையில் கிராஅத்தை மிக அழகாகவும் உருக்கமாகவும் ஓதுகிறவர்களா யிருந்தார்கள். இதைக் கண்டு—கேட்டு காபிர்கள், மனக்கிலேசம் கொள்பவர்களா யிருந்தனர். கிராஅத்தின் இனிமையைக் கேட்டு இன்புறுவதற்காக வசீகரிக்கப் பட்டவர்களைப் போல் சிறுவர்களும் குழந்தைகளும் அங்கு வந்து கூடுவார்கள். இதனைக் கண்டு, குழந்தைகளின் பெற்றோர்களான காபிர்கள், தங்கள் சிறுவர்களைக் கண்டித்து தடுத்து விடுபவர்களா யிருந்தனர். சிறுவர்கள், மனம் மாறி முஸ்லிம்களில் போய்ச் சேர்ந்து விடுவார்களோ என்று காபிர்கள் பயந்து கொண்டிருந்தார்கள்.

தொழுகையில் பிறர் காணத் தக்க—பிறர் கேட்கத் தக்க அம்சங்களான கியாம், ருக்கூஉ, ஸுஜூது, குஊது, தக்பீர், தஹ்லீல் எல்லாம் இருக்கின்றன. நோன்பில் இதெல்லாம் கிடையாது. அதாவது நோன்பானது, பிறரால் கண்டு உணர்வு பெறுவதற்கு, பகிரங்க அம்சங்கள் இல்லாத—அந்தரங்கமான விரதமாகும். நோன்பாளியானவர், 'நான் நோன்பு நோர்க்கிறேன்' என்று பகிரங்கமான முறையில், வாக்கினாலோ செயலினாலோ எதையும் வெளிப்படுத்தவேண்டிய அவசியமில்லை.

எனவே நோன்பானது, ஆண்டவனுக்கும் அடியானுக்கு மிடையில் ரகசியமாய் இருந்து வரும் ஓர் அனுஷ்டான முறையாகும். ஒரு

18793

நோன்பாளியின் அந்தரங்க சுத்தியை, எல்லாம் வல்ல அல்லாஹு தஆலா மட்டுமே உணர வல்லான்.

நோன் பென்பது மனதையும் இச்சைகளையும் கட்டுப்படுத்தி, ஆத்ம பூர்வமாய் ஆண்டவன் கட்டளைக்கு அடி பணிந்து, இகபர நன்மைகளை அடைவதாகும். சில நித்திய காரியங்களை கட்டுப் படுத்திக் கொள்வது, சில தினசரித் தேவைகளை விலக்கி வைப்பது, மனதைப் பரிசுத்தப் படுத்திக் கொள்வது, அதனால் ஏற்படும் சரீர சம் பந்தமான கஷ்டங்களை ஒரு குறிப்பிட்ட காலம் வரை பொறுத்துக் கொண்டு, தியாகம் புரிவது நோன்பாகும்.

எனவே, இஸ்லாமிய வணக்க ஒழுக்க ஆரம்ப காலத்தில், மக்கா வில் காபிர்களுடைய எதிர்ப்பு பலமாக இருந்து வந்தது. அம்புக்கும் ஈட்டிக்கும் வாளுக்கும் தலை கொடுத்துக் கொண்டு, அக்கால அரபு கள் (முஸ்லிம்கள்) இஸ்லாமிய வணக்க ஒழுக்கங்களில் ஈடுபட்டு வந்தார்கள்.

முஸ்லிம்கள் தொழுதுக் கொள்ளுங்கால் 'அல்லாஹு அக்பர்' என்று இரைந்து சொல்லவேண்டியதாயிருந்தது; கிராஅத் ஓதவேண்டி யிருந்தது. பல பேர் ஓரிடம் கூடித் தொழுகை நிறைவேற்ற வேண்டியதா யிருந்தது. ஆனால் நோன்புக்கு, இப்படிப் பட்ட நிர்ப்பந்தங்கள்—தர்ம சங்கடங்கள்—சிரமங்கள் கிடையாது.

மௌனமாகவும் மறை முகமாகவும், யாருக்கும் தெரியா வண்ண மும் ஒரு முஸ்லிம் நோன்பு நோர்க்கலாம்; ஒரு முஸ்லிம் நோன்பு நோர்ப்பதை எவரும் தடுத்து நிறுத்தி விட வகை கிடையாது.

இப்படி யெல்லாம் பார்க்கு மிடத்து: நோன்பு தான் இஸ்லாத் தின் 'இபாதாத்' எனும் எல்லா வணக்கங்களை விட முதன்மை யானது, மேலானது, சிறந்தது, இலேசானது என்று விளங்குகிற தல்லவா? ஆயினும், கலிமாவுக்கு அடுத்த படியாய், தொழுகை தான் முதன் முதலாக பர்லாக்கப் பட்டிருக்கிறது.

தொழுகையானது மக்காவிலேயே—ஹிஜ்ரத்தே நபவிக்கு பல வருடம் முன்னதாகவே—பர்லான கடமையாக்கப் பட்டுவிட்டது. ஆனால், நோன்பானது ஹிஜ்ரீ 2-வது ஆண்டில் பர்லாக்கப்பட்டது: அதாவது, மதீனா நகரில் முஸ்லிம்கள் சௌக்கியமாகவும் காபிர் களின் எதிர்ப்பு இல்லாமலும் அமைதி நிலவி யிருந்த காலத்தில் வேத விதியாக்கப் பட்டது. அக்காலத்தில், தக்பீருக்கும் தஹ்லீ

லுக்கும் தஸ்பீஹுக்கும் மதீனுவில் எதிர்ப்பு என்பதே கிடையாது. இஸ்லாம் மதத்துக்குப் போதிய சுதந்தரம் கிடைத்த நல்ல கால மென்று சொல்லலாம்.

இஸ்லாமிய ஆரம்ப காலத்தில், முஸ்லிம்கள் மிக மிக ஏழை களாகவே இருந்து வந்தனர். அதாவது உண்ண நல்ல உணவும், உடுக்க போதிய துணியும், இருக்க வசதியுள்ள வீடும் இல்லாத பரம ஏழை களிலே, இஸ்லாம் மதம் ஆரம்பத்தில் வேர் பெற்று சிறுகச் சிறுக தளிர் விட்டு பரவத் தொடங்கியது. அப்போது அம் முஸ்லிம்களி டம் நோன்புக்கு எதிரிடையான புறச் சக்திகளோ, சாதனங்களோ கிடையாது. இனிய உணவு கிடையாது. வசதியான சுகபோகம் கிடையாது. அழகிய பெண்களின் கூட்டுறவு கிடையாது. இவை தானே நோன்பை முறிப்பவை, கெடுப்பவை, எதிர்ப்பானவை?

நல்ல உணவு இல்லாதவன், சுகபோக வசதி இல்லாதவன், அழகிய பெண்டிர் கூட்டுறவு இல்லாதவன், ஆண்டவன் பெயரைத் தியானித்துக் கொண்டு, நோன்பு என்னும் உண்ணுவிரதம் அனுஷ் டிப்ப தென்பது மிக எளிதான காரியம்.

இங்கொரு வேடிக்கைப் பேச்சு ஞாபகம் வருகிறது: ஒரு ஏழை சன்னியாஸி, ஒரு வீட்டில் அதிகாரத் தொனியில், "அம்மா, சோறு கொண்டு வந்து போடு" என்று கத்தினுன். வீட்டுக்காரி, கொஞ்சம் கடின சுபாவமுள்ளவள். "என்ன இவன், மற்ற பிச்சைக் காரர்களைப் போல், தாழ்மையுடன் கேளாமல், அதிகாரத்தோடு கேட்கிருனே; இவனுடன் பேச்சு கொடுத்துப் பார்ப்போம்" என்று நினைத்தாள். அவள் வெளியே வந்து "ஏ, சாமியாரே! சோறு கொண்டு வந்து போடு" என்று அதிகாரம் பேசுகிருயே, அப்படி நான் சோறு கொண்டு வந்து ('பிச்சை') போடா விட்டால், நீ என்ன செய்வாய்? என்று கேட்டாள்.

அதற்கும் அந்த சன்னியாஸிப் பண்டாரம், தாழ்ந்து பணியா மல், "ஏ அம்மணி, நீ சோறு போடா விட்டால், நான் என்ன செய் வேன் என்று கேட்கின்ருய்? நேற்று அந்த கோடித் தெருவிலும் ஒரு அம்மாள் சோறு போடவில்லை. அதற்காக அங்கு செய்தேனே அந்தக் காரியத்தைத்தான் இங்கும் செய்வேன்" என்று பதில் சொன்னுன்.

அந்த வீட்டுக்காரி அம்மாளுக்கு இன்னும் வியப்பாகிப் போய் விட்டது. மீண்டும், அந்த சாதுவைப் பார்த்து "ஏ சாமியாரே,

நேற்று அந்தத் தெருவில் என்ன செய்தீர் என்பதை சொல்லு பார்க்கலாம்'' என்று மீண்டும் கேட்டாள்.

அதற்கு அந்த ஆண்டிப் பண்டாரம், "அம்மணி, சோறு கிடைக்காத போது நான் அந்தத் தெருவில் என்ன செய்தேன் என்ரு, கேட்கிருய்! சொல்லுகிறேன் கேள்: அன்று பட்டினி கிடந்தேன்'' என்ருன்.

* * *

இது வேடிக்கைப் பேச்சே யானுலும், நம் முஸ்லிம்களுக்கு இதிலொரு படிப்பினே இருக்கிறது. அதாவது, சோறு கிடைக்காது போனதால், அந்தப் பிச்சைக்காரன் பட்டினி கிடந்து விட்டான். இப்படிச் செய்யாமல், அந்த குக்கிராமத்தில் அவனுல் என்ன செய்ய முடியும்? பட்டினி கிடக்கும் காரியத்தை சர்வ சாதாரணமாய் ஏழைகள் எல்லோரும் தான் சில சில சமயங்களில் செய்து வருகிருர்கள். எனவே இதை தியாகம் என்று சொல்ல முடியுமா? விரதம் என்று சொல்ல இயலுமா?

இதற்கு அப்பண்டைய ஆரம்ப காலத்தில் நிகழ்ந்த ஒரு சம்பவத்தையும் உதாரணம் கூறலாம்: பண்டை காலத்து கிறிஸ்துவர்கள், ஒரு வகையான நோன்பு நோற்று வந்தார்கள். எப்படி யெனின், ஒரு பாதிரி உணவு புசித்து விட்டு, 'விரதம் ஏற்றுக் கொண்டதாக' தூங்கி விடுவார். அவர் மீண்டும் விழித்து எழும் வரை அவர், நோன்பு நோர்ப்பவர் என்று கருதப் படுவார். அவரை யாரும் எழுப்பக் கூடாது. தொந்தரவு செய்யக் கூடாது.

இதே விதமாகவே, வேறு கிறிஸ்துவர்கள் நோன்பு நோர்ப்பார்கள். இவர்கள் நோன்பை முறிக்கும் படியான காரியங்களே விட்டு கண்டிப்பாக ஒதுங்கியிருப்பர்; உணவு பொருட்களே வெறுப்பர்; மனேவியரை—பெண்டிரை வெறுப்பர். இதெல்லாம் அவர்களுக்கு ஹராம். பொதுவாக "பட்டினியாக யிருந்து தூங்கிக் கொண்டே இருப்பது" அக்காலத்தில் நோன்பு என்று கருதப் பட்டு வந்தது.

இஸ்லாத்தின் ஆரம்ப காலத்தில் அரபு முஸ்லிம்களும் இப்படிபட்ட வகையில் தான் நோன்பு நோற்று வந்தார்கள். தூங்கத் தொடங்குவதி லிருந்து விழித்து எழுந்து கொள்ளும் நேரம் வரை தான் நோன்பு உடைய காலமாகும். எனவே, ஒரு சில மணி நேரம் நோன்பு நோற்பர்; சிலர் பல மணி நேரம் நோன்பு நோற்பர். வேறு சிலர் ஒரு நாள், இரண்டு நாள் நோன்பும் நோற்பர்.

இதை யொட்டி சில சஹாபிகளுடைய நோன்பு முறை இங்கு குறிப்பிடத் தக்க தாகும். அவர்களில் ஒருவர், பகலெல்லாம் உண்ணு மல் பருகாமல் நோன்பு அனுஷ்டித்தார்; பகலெல்லாம் வேலைக்குப் போய் உழைத்தார். மாலையில் வீட்டுக்கு வந்து பார்த்தார். ஏழ்மை யின் காரணத்தால், வீட்டில் உணவுப் பொருள் ஏதும் தயாராக இருக்க வில்லை. மனைவி, "கொஞ்சம் பொறுங்கள்; சமைத்துத் தரு கிறேன்" என்று சொன்னர். அந்த சஹாபி, களைத்துப் போய் அப் படியே தூங்கி விட்டார். தூங்கும் நோன்பாளியை எழுப்பக் கூடா தென்பது அக்கால சம்பிரதாயம். எனவே அவர் இரவு முழுதும் தூங்கி விட்டார். மறு நாட் காலை எழுந்து பார்த்தார். பொழுது விடிந்து விட்டது; அன்றைக்கும் பட்டினியாகவே நோன்பு வைத்து கொண்டார். தொடர்ந்து நோன்பு வைத்துப் பட்டினி கிடந்ததால், மிகவும் களைத்து மூர்ச்சித்து விழுந்து விட்டார். இந்த முறையில் பட்டினி இருப்பதும் அக்காலை நோன்பாக கருதப்பட்டது.

ஹஜ்ரத் உமர் (ரலியல்லாஹு அன்ஹு) அவர்களும் அக்காலை (ஆரம்பத்தில் மிக சிரமமாக) நோன்பு நோற்ருர்கள். நோன்பு காலத்தில், பகலில் பட்டினியாய் இருப்பது போல், இரவில் மனைவி யரிடம் இல்லற உறவு வைத்துக் கொள்ளா திருப்பது நோன்பின் அம்சமாக கருதப்பட்டது. இங்ஙனம், மிக பலிஷ்டரும் சுகபோகியு மான ஹஜ்ரத் உமர் (ரலி) அவர்களால், தொடர்ந்து சில நாள் மனைவி யை விட்டுப் பிரிந்து படுப்பது முடியாத காரியமாகி விட்டது.

இஸ்லாமிய ஆரம்ப கால நோன்புகளில் இவ்விதமான கஷ்டங் கள் பல இருந்தன. இந்தக் கஷ்டங்களை யெல்லாம், அல்லாஹு தஆலாவுடைய கிருபையால், நமது நபிகள் நாயகம் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், வஹீக் கட்டளை மூலம் நிவர்த்தித்து வைத்து விட்டார்கள்.

ஆயத்து: "நோன்புடைய நாளின் இரவில், நீங்கள் மனைவி யுடன் தங்கி யிருப்பது (இல் வாழ்வு புரிவது) உங்களுக்கு 'ஹலால்' ஆக்கப்பட்டுள்ளது. ஏனெனின் உங்களுடைய பெண்டிர் உங் களுக்குப் போர்வை போன்றவர்கள்; நீங்களும் அவர்களுக்குப் போர்வை போன்றவர்களே......(நோன்பாளிகளே) நீங்கள் இரவில் (தாராளமாக) உண்ணுங்கள்; பருகுங்கள்—கறுப்புக் கயிறிலிருந்து

வெள்ளைக் கயிறு விளக்கமாய்த் தெரியும் (உதய காலமாகிய) காலை நேரம் வரை இப்படிச் செய்யலாம்.'' (கருத்து)

நமது இஸ்லாமிய நோன்பு, பண்டைய கிறிஸ்துவ—யூத—சமூகத்தாரின் கடினமான நோன்பு—விரதங்களைப் போலில்லை; நம் முஸ்லிம்களுக்கு நோன்பு எவ்வளவோ இலேசான தாகவும் சௌகர்யமான தாகவும் ஆக்கப்பட்டுள்ளது.

காலை 5-மணி முதல் மாலை 6-மணி வரை (சுமார்) 13-மணி நேரம் வரை, நம் முஸ்லிம்கள் உண்ணாமலும் பருகாமலும் மனைவியிடம் சுகபோகம் அனுஷ்டிக்காமலும் இருக்க வேண்டியுள்ளது. 13-மணி நேரம் தொடர்ந்து பட்டினி விரதம் இருப்பது சிரம சாத்தியமான காரியமன்று. மனிதன் பத்து, இருபது நாள் தொடர்ந்து பட்டினி இருந்தாலும் இயற்கையாய் செத்துப் போய் விட மாட்டான். எனவே, 13-மணி நேர பட்டினி விரதம் மனித சக்தியை மீறிய காரியமல்ல. நோன்பு நேரத்தில் தூங்கவும் செய்யலாம். லோக விவகாரங்களை கவனிக்கவும் செய்யலாம். வியாபாரம், கொள் வினை, கொடுக்கல் வினையாவும் புரியலாம். ஆனால், பொய் சொல்லக் கூடாது. பிறர் மனதை நோகச் செய்யக் கூடாது. கண் கொண்டு பிறமாதரை (காமநோக்காக) நோக்கக் கூடாது. மனதையும் இச்சையையும் கட்டுப் படுத்திக் கொள்ள வேண்டும். இது தான் இஸ்லாத்தின் சீரிய-சிறந்த-புனித நோன்பு முறை.

நோன்பு நோர்ப்பதற்கு ஏழை—பணக்காரர் என்ற வித்தியாசம் நம் இஸ்லாத்தில் இல்லை. ஏழைக்கு வீட்டில் உணவு பொருளும் சுகபோக சாதனமும் தாராளமாய் கிடைப்பதில்லை; பணக்காரர் களுக்கோ, வேளை தோறும் பலப் பல வகையான உணவுப் பண்டங் களும், சகல சுகபோக சாதனங்களும் கிடைக்க வசதி யுண்டு. ஆயினும், இஸ்லாத்தின் கட்டளைப் பிரகாரம் இரண்டு சாரார்களுமே நோன்பு நோர்க்கக் கடமைப் பட்டுள்ளனர்.

சௌகர்யமுள்ள சில பணக்காரர்கள், சௌகர்யங்க ளில்லாவிடி னும் சிரமப்பட்டு நோன்பு நோற்கும் ஏழை எளியோரைப் பரிகாசம் செய்வது உண்டு. அதாவது, “வீட்டில் உண்ணச் சோறு இல்லாத தால் அவர்கள் நோன்பின் பெயரால் பட்டினி கிடக்கிறார்கள். ஆண்டவன் எங்களுக்கு பண-உணவு-போக வசதியைத் தாராளமாய் கொடுத்

திருக்க, நாங்கள் என் பட்டினி (நோன்பு) இருக்க வேண்டும்?" என்பது சில சுகபோகிகளின் திமிருன பேச்சு.

இக்காலத்தில், மூச்சு அடைப்பு—மார் அடைப்பு—ஹார்ட் பெயில்—பிளட் பிரஷர்...என்று பல விதமான நோயால், திடீர் மரணங்கள் ஏற்படுவதைக் கேள்விப் படுகிறோம். இப்படித் திடீர் மரணம் அடைபவர்கள், பெரும் பாலும் கொழுத்த சரீரமுள்ள பணக்காரர்களாகவே காணப்படுகின்றனர். ஏழை எளியோருக்கு அதாவது அதிகம் சுகபோகங்களில் ஈடுபட வசதி யில்லாமல் சாதாரண சோறு உண்டு, உழைத்துப் பாடு பட்டு, எளிய முறையில் வாழும் மெல்லிய சரீர முடையவர்களுக்கு இந்த 'ஹார்ட் பெயில்' (மாரடைப்பு) என்ற திடீர்மரணம் அதிகம் நேரிடுவதில்லை; இதற்குக் காரண மென்ன?

சரீரத்தில் சதையும், கொழுப்பும், இரத்தப் பிரவாகமும் அதிகரித்துப் போகுங் கால், மனிதன் சுகப் புருஷனாய் விடுகிறான். அவன் அதிகம் உழைப்பதில்லை; உடலிலிருந்து வியர்வை வெளிப்பட அவன் விரும்பு வதில்லை; அதிகம் நடக்கும் சிரமம் மேற் கொள்வதில்லை. சதா, பண சம்பாத்தியத்திலேயே ஈடுபட்டு, கவலையும் மனஞ் சஞ்சலமும் கொண்டு உழல்கிறான். இதனால் சரீரத்தில் இரத்தம் நல்ல விதமாய் பரவி ஓடிச் செல்லாமல், தய்ங்கி, எங்கேனும் தேங்கி விடுகிறது. ஹிருதயக் கமலத்திற்கு இரத்தம் சப்ளை ஆகிக் கொண்டே இருக்க வேண்டும். அதற்குத் தடை ஏற்படும் போது தான், மாரடைப்பு (ஹார்ட் பெயில்) உண்டாகி திடீர் மரணம் ஏற்படுகிற தென்று டாக்டர்கள் கூறுகின்றனர்.

சோதரீர்! இதை யெல்லாம், நோக்கு மிடத்து: பணக்காரரும் நோன்பு இருந்து சரீரத்தை இளைக்க வைத்து, ஆரோக்கியமாய் வாழ்வது எத்தனை நன்மை பயக்கும்! இஸ்லாமிய நோன்பில், தேக ஆரோக்கிய தத்துவம் அடங்கி யிருப்பதை கவனியுங்கள். வருடத்தில் பதினொரு மாதங்களில் ஏற்படும் சரீரக் கழிவுப் பொருளை, நோன்பு சுத்தப் படுத்தி ஆரோக்கியம் நல்கிறது. இஸ்லாமிய நோன்பு வெறும் பட்டினியல்ல; வைத்திய முறைப்படியும் அது ஒரு சிகிச்சை முறையாகும். எல்லாம்வல்ல இறைவன், நம்மெல்லோர்க்கும், நோன்பு நோர்க்கும் பாக்கியத்தையும், அதனால் தேக ஆரோக்கியத்தையும் நல்குவானாக. ஆமீன்!

மறுலோக நாணயப் பிரிவர்த்தனை

(ரஹ்மத் பாகவி)

இப் பூவுலகத்தில் மாந்தராய்ப் பிறந்தோ ரெல்லோரும் ஒரு நாள் ஆவி நீத்து இறந்து, இந்த ஸ்தூல ஜடலத்தை விட்டுப் பரம லோகத்திற்குப் போய்த்தான் தீரவேண்டும்.

இப்பூவுலகில் நாம் நிலம், புலன், ஆஸ்தி, சொத்து, செல்வம் பணம், காசு, நகை, நட்டு, சாமான், வஸ்திரம் யாவும் ஏராளமாய் தேடி வைத்துக் கொண்டு சுகமாக வாழ்கின்றோம். இவ்வுலகத்தை விட்டுப் போகும் போது இவைகளை யெல்லாம் கூடவே எடுத்துக் கொண்டு போக முடிகிறதா?

நாம் மரித்துப் போனவுடன், உற்றார் உறவினர், நம் கை விரலில் உள்ள மோதிரத்தைக் கூட விட்டுவைப்பதில்லை. சொத்து செல்வம் சாதனம் யாவற்றையும் அவர்கள் அபகரித்துக் கொண்டு நம்மை வெறுமனே, அப்பிரலோகத்துக்கு அனுப்பி வைத்து விடுகின்றனர்.

ஓர் உதாரணம்

சென்னையில் கவர்னர் உத்தியோகம் புரிவதற்காக, லண்டனிலிருந்து ஓர் ஆங்கிலேயப் பிரமுகர், இங்கு வந்தார். நல்ல விதமாக பல ஆண்டு உத்தியோகம் புரிந்து நல்ல பெயர் வாங்கினர். சம்பளத்தின் மூலமும் உப சம்பாதனைகள் மூலமும் நிறை சொத்து செல்வங்களையும் சுகபோக சாதனங்களையும் சேர்த்து வைத்தார். ஏராளமான தங்கம், வெள்ளி, செப்பு நாணயங்களையும் சேர்த்து வைத்திருந்தார். ஒரு அறை நிறைய விலையுயர்ந்த அரும் பொருட்களை சேமித்துவைத்திருந்தார்.

அந்தக் கவர்னரின் உத்தியோக காலம் முடிவடைந்து விட்டது; புது கவர்னர் பெயரும் நியமனமாய் விட்டது. இங்கிலாந்து அரசிடமிருந்து, உத்தரவும் வந்து விட்டது; விமானமும் வந்து விட்டது. உடனே இவர் சென்னையை விட்டு இங்கிலாந்துக்குப் போய் சேர வேண்டும். போகும் போது, சொத்து செல்வம், நகை நாணயம், பணம் காசு கோட்டு அரும் பொருள் இவைகளை யெல்லாம் ஆகாய விமானத்தில் எப்படி ஏற்றிக் கொண்டு போக முடியும்? அப்படிச் செய்ய அரசாங்க அனுமதியும் இல்லையே.

புத்திசாலியான அந்த மனிதர், விவேகமான ஓர் காரியம் செய்தார். சொத்து செல்வங்களையும், அரிய சாமான்களையும் விற்றுப்

பணமாக்கிக் கொண்டார். தாம் சேகரித்து வைத்திருந்த தங்க வெள்ளி செம்பு நாணயங்களையும் பணமாக்கிக் கொண்டார்.

எல்லா வற்றையும் ஒரு கைப் பெட்டியில் போட்டு, இம்பீரியல் பாங்குக்கு எடுத்துக் கொண்டு போய் எண்ணிக் கொடுத்து விட்டு, "ஒரு டிராப்ட் கொடுங்கள்" என்று கேட்டார்.

டிராப்ட் என்றால் என்ன? இவர் சேகரித்து வைத்திருந்த 10 லக்ஷம் ரூபாய்களுக்கும், ஈடாக அந்தப் பாங்க் அதிகாரி 'ஒரு காகிதம்' எழுதிக் கொடுத்தார். அந்த 'செக்' என்னும் காகிதத்தில் என்ன எழுதப் பட்டிருந்த தென்றால்: "இன்ன பேருடையவர், எமது ஆபீஸில் இத்தனை லக்ஷம் ரூபாய் கொடுத்துள்ளார். இதற்கிடாக, இங்கிலாந்து பாங்கியின் அதிகாரி, இவருக்கு அங்கே லண்டன் பாங்கில் அவர் இஷ்டம் போல், இஷ்டப்பட்ட நேரத்தில், அவர் பேருக்கு ரொக்கம் கொடுத்துவிடுங்கள்" என்று சமிக்ஞையாக அதில் உத்தரவு எழுதப்பட்டிருந்தது.

இதை நாணய பிரிவர்த்தனை என்கிறோம். அந்த ஆங்கிலேயர், ஒரு துண்டு கடிதாசியை, தமது சொந்த ஊருக்கு எடுத்துப் போகிறார். இது எவ்வளவு சுலபமான வழி? எவ்வளவு லாபகரமான ஏற்பாடு. இவர் இந்தியாவில் தேடி சேமித்த சொத்து முழுதும் எடுத்துச் செல்ல வேண்டிய சிரமமில்லாமல், அவ்விடத்து சூழ்நிலைக்கேற்ப அவருக்கு அங்கு பணம் கிடைத்து விடும் என்பது ஆச்சரியமல்லவா?

படிப்பினை

இதே மாதிரி தான், அல்லாஹ்—ரஸூலைக் கொண்டு நல்ல அமல் புரியும் முஸ்லிம் ஒருவர், இந்த உலகம் என்னும் துன்யாவில் சம்பாதித்த சொத்து செல்வம், ஆஸ்தி பூஸ்தி, நகை நெட்டு நாணயம் எல்லாவற்றையும், மரிக்கும் போது, கூட எடுத்துச்செல்லும் நிர்ப்பந்தமின்றி, அங்கு ஆகிரத்தில், நன்மைஅடைவதற்கு, ஆண்டவனது பாதையில் அதை யெல்லாம் செல வழித்து, "நல்அமல்" என்னும் 'டிராப்டை' பெற்றுக் கொள்ள வேண்டும். இந்த "அமல்" என்னும் 'செக்' தான், மறுலோகத்தில், சுவர்க்கலோகத்தில் செல்லுபடியாகும்.

எனவே ஆகிரத்துக்கு தேவையுள்ள தவாபை துனியாவிலேயே தேடிக் கொள்வோமாக!

மாபெரும் அறிஞரின் மகத்தான சேவை.

டி. எப். ரஹ்மத்துல்லா- மஆலி (பாகவி)

'தோன்றின் புகழொடு தோன்றுக, அஃதிலார்
தோன்றலின் தோன்ருமை நன்று'

என்ற முதுமொழிக்கேற்ப, இத்தரணியில் ஆயிரத்திலோ, இலக்ஷத்திலோ, கோடியிலோ ஒருவர்தான் மகான் தோன்றுவதுண்டு. உலகில் தினமும் எத்தனையோ பேர் பிறக்கிருர்கள, எத்தனையோ பேர் இறக்கிருர்கள், அவர்களைப்பற்றி யெல்லாம் உலகத்தோர் சந்தோஷமோ, கவலையோ படுகிருர்களா? இல்லை.

மகத்தான அறிஞர், மாபெரும் ஆலிம், உலகம் புகழ் ஞானி, மேன்மையான மேதை யொருவர் சென்ற பிப்ரவரி மாதம் 21-ந் தேதி இரவு 2-மணிக்கு, "என்னை அல்லாஹ்வுடைய புறத்தில் விட்டு விடுங்கள்" என்று இறுதியாக, அல்லாஹ்வின் திருப்பெயரை கூறிய வண்ணம் அவனியை விட்டுப் பிரிந்து விட்டார். அவரது பிரிவாற்ருமைக்கு, உலகம் பூராவும் துக்கம் கொண்டாடியது; இந்தியா, பாக்கிஸ்தான் இரு அரசாங்கமும் அனுதாபம் செலுத்தின.

அப்படிப்பட்ட மேதை யார்? இமாமுல் ஹிந்த் ஹஜ்ரத் மவ்லான அபுல் கலாம் ஆஜாத் (ரஹ்) அவர்களே யாவர்.

பெயர்: முஹ்யித்தீன் அஹ்மத்.

இன்று, அபுல் கலாம் ஆஜாத் என்ருல், இந்தியாவின் மாபெரும் அறிஞர், கல்வி-கலை-கலாசார இலாக்கா மந்திரி என்று இந்தியர் எல்லோருக்கும் தெரியும். ஆனல், 'முஹ்யித்தீன் அஹ்மத்' என்ருல் யாரென்று எவருக்கும் தெரியாது. நமது மர்ஹூம் மவ்லான அபுல் கலாம் ஆஜாதுக்கு, அவரது தாய்- தந்தை வைத்த பெயர் 'முஹ்யித்தீன் அஹ்மத்' தான்.

'அபுல் கலாம்' என்பது மவ்லான அவர்கள், ஆலிமாகி, மேதையாகி, பிரசங்கமாரி பொழிவதில் வல்லுனராகி, பேச்சாளராய் விளங்கியபோது அவருக்கு 'அபுல் கலாம்' (பேச்சுக்குத் தந்தை) என்று 'குன்யத்' பட்டப்பெயர் சூட்டப்பட்டது.

'ஆஜாத்' என்பது 'சுதந்தரன்' என்ற அர்த்தம் கொண்டதாகும். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் இந்நாட்டில் வலிமையுடன் நடை பெற்றுக் கொண்டிருந்த ஐம்பதாண்டுகளுக்கு முன்னர், சுதந்தரம் (ஆஜாதி) என்று யாரும் சொல்ல பயப்பட்டுக் கொண்டிருந்தார்கள். அப்போதே மவ்லான அவர்கள், தாம் புனையும் உர்தூ, அரபி, பார்ஸி கவிதைகளில் 'ஆஜாத்' என்ற தகல்லுஸ் (புனைப் பெயர்) சூட்டிக் கொண்டெழுதுவார்.

வம்சப் பெருமை.

மவ்லானு ஆஜாதின் தந்தைப் பெயர்- ஹஜ்ரத் மவ்லானு முஹம்மத் கய்ருத்தீன் என்பதாகும். இப்பெரியார், ஷெய்கு ஜமாலுத்தீன் (ரஹ்) அவர்களின் ஸில்ஸிலாவை (குரு வழியைச்) சேர்ந்தவராவர்.

ஹிந்துஸ்தானத்திலே, முகலாய முஸ்லிம் மன்னர்களின் ஆட்சி விளக்கு, ஒளிகுன்றி மங்கி மறைந்து போய்க் கொண்டிருந்த காலத்தில் அதாவது சுமார் 1857-ம் ஆண்டிலே, ஹஜ்ரத் மவ்லானு முஹம்மத் கய்ருத்தீன் அவர்கள், இந்த இந்திய நாட்டை, அன்னிய (ஐரோப்பிய) ஆதிக்கத்தை விட்டும் காப்பாற்றுவதற்காக ஒரு போராட்ட இயக்கத்தை தோற்றுவித்தார். அது ஆலிம்களையும் உலமாக்களையும் அறிஞர்களையும் தலைவர்களையும் கொண்ட கோஷ்டியாகும். "முஜாஹதீன் இஸ்லாம்" (சன்மார்க்கத்துக்குப் போராடுபவர்கள்) என்று அக்கோஷ்டிக்குப் பெயர்.

சுதந்திர முதற்போர்.

மவ்லானு ஆஜாதின் தந்தை மவ்லானு கய்ருத்தீன் சாஹிப், இந்தப் போராட்ட இயக்கத்தில் ஈடுபட்டுழைத்ததால், அன்னியரான வெள்ளையரின் கோபத்துக்கு ஆளாக வேண்டிய தாயிற்று. எனவே, அந்த ஆரம்ப காலதேச சுதந்திரப் போராட்டம் அபஜய மடைந்து விட்டது. ஆதலின், மவ்லானு கய்ருத்தீன், 1858-ம் ஆண்டு, இந்தியாவை விட்டு ஒரே அடியாய், ஹிஜ்ரத்துச் செய்து, ஹிஜாஸுக்கு (அரபு நாட்டுக்குப்) போய்ச் சேர்ந்து விட்டார்.

மக்காவில் பிறந்த மணிவிளக்கு.

மவ்லானு கய்ருத்தீன் குடும்பம் கொஞ்ச காலம் அரபு நாட்டில் வீடு வாசலின்றி, இருக்க உறைவிட மின்றி அலைந்து உழன்றது. அந்தக் காலத்தில் தான், பரிசுத்த மக்கா நகரின் கண், எங்கோ ஓரிடத்தில் கி. பி. 1888-ம் ஆண்டு நம் இமாமுல் ஹிந்த் மவ்லானு ஆஜாத் பிறந்தார். அப்போது 'பெய்ரோஸ் பக்த்' என்று (சரித்திர பூர்வமான) பெயர் சூட்டப்பட்டது.

மவ்லானு ஆஜாத் அவர்களின் பால்யகாலம் புனித மக்கா நகரிலேயே கழிந்தது. அங்கேயே, அரபு உஸ்தாதிடம் ஆரம்பக் கல்வியை கற்ருர். மவ்லானுவுக்கு சிறு வயதிலே, சுறுசுறுப்பான புத்தியும் தீவிரமான ஆராய்ச்சித் திறமையும் இருந்தன. எனவே, உஸ்தாதுமார்களின் அதிகத் தூண்டுதலின்றியே அரபு மொழியில் உயர்தரமான படிப்புகளை யெல்லாம் சுயமே உணர்ந்து படித்துக் கொண்டே போனுர்.

"வித்தையும் செல்வமும் விதிப்படி கிடைக்கும்" என்ற சொற்படி, மவ்லானு ஆஜாத், ஆண்டவனுடைய கற்பனையின் பிரகாரமே கல்வியில் மேதாவியாய் விளங்கினுர்:—"கல்வியின் வாயலை இறைவனே எனக்குத் திறந்தளித்தான். ஹக்கிகத்துடைய இல்மும்,

மஃரிபத்துடைய ஞானமும் எனக்கு ஆண்டவனே அளித்தான். அவனுடைய கஜானுவிலிருந்து எனக்கு ஞானச் செல்வம் கிடைத்தது. ஷரீஅத்தை எனக்கு போதித்தவன் ஆண்டவனே. தரீகத்தின் மேன்மையும் நேர்மையும் அவனருளாலேயே எனக்குத் தெளிவாயிற்று. திருக் குர்ஆனின் விழுமிய தாத்பரிய உரைகளின் ஊற்றை, அல்லாஹு தஆலாவே என் உள்ளத்தில் உண்டாக்கிப் பெருகச் செய்தான்'' என்று மவ்லானு ஆஜாத் அவர்கள், தமது சுய சரிதையை கூறும் நூலொன்றில் எழுதி, எடுத்தோதி யிருக்கிறுர்.

இந்தியாவுக்கு விஜயம்

அல்லாமா ஆஜாத் அவர்கள், அரபுக் கலையில் மகா தேர்ச்சி பெற்று, மாபெரும் ஆலிமாய் விளங்கிய பின், திரு மக்காவை விட்டு இந்தியாவுக்கே குடியேறி வந்து சேர்ந்து விட்டார்கள். தன் தந்தையைப் போலவே பொதுச் செயலிலும், இந்திய விடுதலைப் போரிலும், அரசியல் துறையிலும் இங்கு ஈடுபட்டார்கள்.

கி. பி. 1857-ம் ஆண்டு, இந்திய சரித்திரத்தில் முக்கியமான காலமாகும். அக்காலத்தில்தான், இந்திய விடுதலைப் போராட்டம் பகிரங்கமாய் நடைபெற்றது. வெள்ளையர்கள் இந்தப் போராட்டத்தை அடக்கி ஒடுக்கி ஒழிப்பதில் தங்கள் சக்தி முழுவதையும் செலவிட்டார்கள். எனவே, இந்திய முஸ்லிம்களுடைய வாழ்க்கை அக்காலத்தில் மிகவும் சோதனைக் குள்ளாயிற்று. ஏனெனில், அக்காலத்தில் முஸ்லிம்கள்தான் வெள்ளையரை எதிர்த்து இந்திய சுதந்திர போராட்டங்களில் முதன்மையாய் ஈடுபட்டவர்கள். பன்முறை முஸ்லிம் தேசாபிமானிகளுக்கு, தம் போராட்டத்தில் தோல்வி ஏற்பட்டும் அவர்கள் சும்மா இருந்துவிடவில்லை.

அப்போராட்டத்தைத் தொடர்ந்து 1910-ம் வரை மவ்லானு அபுல்கலாம் ஆஜாத் அவர்கள், பகிரங்கமான இடங்களில் தங்கள் வாக்கு வன்மையான பிரசங்கங்கள் மூலமாகவும், ஆணித்தரமான எழுத்து (கட்டுரை) மூலமாகவும் பெரும் சேவை செய்து வந்தார்கள்.

'அல்ஹிலால்' வாரப் பத்திரிகை

கல்கத்தா நகரத்திலே, மவ்லானு அபுல்கலாம் ஆஜாத் அவர்கள் கி. பி. 1912-ம் ஆண்டு "அல்ஹிலால்'' (இளம் பிறை) என்ற உர்து வாரப் பத்திரிகையை நடத்தினுர்கள். இந்த பத்திரிகை ஹிந்துஸ்தானத்தில் மட்டுமல்ல, வெளி நாடுகளிலும் (பொதுவாக உலகிலும்) ஒரு புரட்சியை உண்டாக்கிவிட்டது. இந்திய அரசியல்என்பது என்னவென்று அப்போதுத்தான் ஜனங்களுக்குப் புரியத்தொடங்கியது.

'அல்ஹிலால்' பத்திரிகையில் அரசியல் விஷயத்துடன், இஸ்லாமிய கல்விச் செல்வமும் வாரந்தோறும் அள்ளிச் சொரியப்பட்டது. திருக்குர்ஆன் ஆயத்துகளுக்கும், புனித ஹதீதுகளுக்கும் மவ்லானு

அவர்கள் எழுதும் விரிவுரையும் தெளிவுரையும், புதுமை நிறைந்தன வாய் இருந்தன. இந்நாட்டு ஆலிம் உலமாக்களுங்கூட அதை விரும் பிப் படித்து பயன் அடைந்து வந்தார்கள்.

'அல்ஹிலால்'—இல்லை—'அல்பலாக்'

'அல்ஹிலால்' பத்திரிகை அரசியல் விஷயங்களை காரசாரமாக எழுதி வந்ததால், வெள்ளை அதிகார வர்க்கத்தினர் அதன்மீது கடுமை யான நடவடிக்கை எடுத்துக் கொண்டார்கள். 'அல்ஹிலால்' பத்திரிகை பெருந் தொகை ஜாமீன் கட்டவேண்டு மென்று தண்டனை விதித் தனர். இந்தச் சம்பவம் முதல் ஐரோப்பிய யுத்தம் நடைபெற்ற காலத்தில் நிகழ்ந்ததாகும்.

மவ்லானா அபுல்கலாம் ஆஜாத் அவர்கள், ஜாமீன் தொகை (அபராதம்) கட்ட முடியாதென்று கூறி 'அல்ஹிலால்' பத்திரிகையை நிறுத்தி விட்டார்கள். நிறுத்தி விட்டு சும்மா இருந்துவிட வில்லை. "அல்பலாக்" என்ற பெயரால் மற்றொரு புதுப் பத்திரிகையை ஆரம்பித்து, அதே முறையில் நடத்தினார்கள்.

நாடு கடத்தப்படல்

வங்க அரசாங்கத்தார், அபுல்கலாம் ஆஜாத் மீது மிகவும் கோபம் கொண்டு விட்டனர். 1916-ம் ஆண்டு மார்ச் 23-ந்தேதி "உடனே ஒரு வாரத்துக்குள் நீர், வங்க நாட்டு எல்லையை விட்டும் ஓடிப்போக வேண்டும்" என்று நாடு கடத்தும் உத்திரவை மவ்லானா மீது போட்டு விட்டனர்.

எனவே மவ்லானா அவர்கள் 1916-ம் ஆண்டு கல்கத்தாவைவிட்டு வெளியேறி, பீஹார் மாகாணத்தைச் சேர்ந்த 'ராஞ்சி' என்ற இடத்துக் குப்போய் சேர்ந்து, அங்கும் பிரசங்கம் மூலம் பிரசாரம் செய்தார்கள்.

அங்கும் அரசாங்கத்தார், மவ்லானா மீது நடவடிக்கை எடுத்து, நாலே நான்கு தினத்தில், அவரைப் பிடித்துச் சிறை யிட்டு, 'தரா பாதி' என்ற இடத்தில் "பாதுகாப்பில்" போட்டு வைத்தார்கள். வங்க சட்டசபையில், இந்த அடக்குமுறையைப்பற்றி மிஸ்டர் மஜ் ஹருல் ஹக் என்ற மெம்பர் கேள்வி கேட்டு கிளர்ச்சி செய்தார்.

கிலாபத் இயக்கம்.

1920-ம் ஆண்டு மவ்லானா அபுல் கலாம் ஆஜாத் அவர்கள் விடு தலை செய்யப்பட்டார்கள். மவ்லானா அவர்கள், அப்போது நடைபெற் றுக் கொண்டிருந்த கிலாபத் கிளர்ச்சியில் ஈடுபட்டு, இந்தியா தேசத் துக்கும் இஸ்லாமிய உலகத்துக்கும் ஒருங்கே சேவை செய்து வந் தார்கள்.

'தர்க்கே மவாலாத்' என்னும் ஒத்துழையாமைக் கிளர்ச்சிக்கு ஆத ரவு ஊட்டி, இஸ்லாமிய ஷரீஅத்துப் பிரகாரம், அந்த இயக்கத்தில் எல்லா முஸ்லிம்களும் பங்கு எடுத்துக் கொள்ள வேண்டு மென்று, குர்

ஆன்-ஹதீது ஆதாரங்களை எடுத்துக்கூறி, நற்பிரசாரம் செய்து வந்தார்கள் மவ்லானா ஆஜாத் அவர்கள்.

காங்கிரஸும், கிலாபத்தும்.

அந்தக் காலத்தில் ஹிந்துக்களுடைய காங்கிரஸும், முஸ்லிம்களுடைய கிலாபத்தும் கூட்டுறவு ஏற்படுத்திக் கொண்டு, ஒன்றாகச் சேர்ந்து விட்டன. ஹிந்து முஸ்லிம் ஒற்றுமையும் நிலைத்து நின்றது. பெரும் பெரும் தலைவர்களெல்லோரும் தோளோடு தோள் சேர்ந்து, இந்திய விடுதலைப் போராட்டத்திற்கும், சமூக அபிவிருத்தி திட்டத்திற்கும், அன்னிய அரசாங்கத்தை விரட்டுவதற்கும் பாடு பட்டு வந்தார்கள். அப்படிப்பட்ட மாபெரும் தலைவர்களின் பெயர்களில் குறிப்பிடத் தக்கவை சில:—

(1)டாக்டர் அன்ஸாரி. (2)மவ்லானா ஷவ்கத் அலி (3)மவ்லானா முஹம்மத் அலி (4) மவ்லானா அபுல் கலாம் ஆஜாத் (5) மகாத்மா கரம்சந்த் காந்தி (6) பண்டித் மோத்திலால் நேஹ்ரு (7) பண்டித் மாளவியா (8) டாக்டர் கிச்சிலு. (9)முஹம்மத் அலி ஜின்னாஹ் (10) கான் அப்துல் கப்பார் கான் (11) யாகூப் ஹஸன்சேட்........ (இன்னும் பல)

பாக்கிஸ்தானுக்குப் பின்

மவ்லானா முஹம்மத் அலி (ஜவ்ஹர்) இறந்துபோன பின்னர், காங்கிரஸுக்கும் கிலாபத்துக்கும் அபிப்பிராய பேதமேற்பட்டது. காங்கிரஸில், ஆரிய சமாஜிகளும் ஹிந்துமகா சபையினரும் புகுந்து கொண்டு, முஸ்லிம் தலைவர்களுடைய மனதைப் புண்படுத்தினர்கள். எனவே, சில முஸ்லிம் தலைவர்கள், காங்கிரஸை விட்டும் விலகி, அகில இந்திய முஸ்லிம் லீக் ஸ்தாபனத்தில் சேர்ந்து, தேச விடுதலைக்கும் இஸ்லாத்துக்கும் பாடுபடத் தொடங்கினர்கள். ஆனல் மவ்லானா அபுல் கலாம் ஆஸாத் அவர்கள் காங்கிரஸை விட்டு வெளியேறாமலும், முஸ்லிம் லீகில் சேராமலும் தனித்திருந்து, மகாத்மா காந்தி, ஜவாஹர்லால் நெஹ்ரு, ரஜேந்திர பிரசாத் போன்ற தேசியத் தலைவர்களுடனேயே இருந்து, சேவை செய்து வந்தார்கள். இதனலே, ஒரு சில முஸ்லிம்களுடைய அபவாதங்களுக்கும் குறை கூறல்களுக்கும் (மர்ஹூம்) மவ்லானா ஆஜாத் இலக்காக வேண்டிய தாயிற்று.

பாக்கிஸ்தான் பிரிவினைக் கொள்கையை, மவ்லானா அபுல் கலாம் ஆஜாத் ஆதரிக்க வில்லை. ஆதலால், பாரிஸ்டர் காயிதே ஆஜம் முஹம்மத் அலி ஜின்னாஹ் உடைய கோபத்துக்கு—அல்லாமா இமாமுல் ஹிந்த் அபுல் கலாம் ஆஸாத் இலாக்காக வேண்டிய தாயிற்று.

ஆண்டவன் நாட்டப்படி எல்லாம் நிகழ்ந்து விட்டது. இந்திய முஸ்லிம்களுக்கு தனிநாடு (பாகிஸ்தான்) ஏற்பட்டு விட்டது. காயிதே ஆஜமும் அல்லாஹ்விடம் போய்விட்டார். இமாமுல் ஹிந்து ஆஸாதும் (தமது 69-ம் வயதில்) அல்லாஹ்விடம் போய் விட்டார்.

நோன்பு நோற்றிடுவோம்

கும்மிடி பூண்டி. ப. தா. ஷாஹுல் ஹமீத்

படம்: எங்கள் வீட்டு மஹாலக்ஷ்மி. இசை: நாட்டுக்கு பொருத்தம்

தொகையரு

மாநிலமெனும் ஆழ்கடலில் வாழ்க்கை யெனும் படகினையே
மதியெனும் துடுப்பினால் செலுத்தி நன்றே—கரை சேர
மாந்தர்க்கு வழிகாட்டும் கலங்கரை விளக்கான
மாண்புமிகு இஸ்லாத்தின் நோன்பினை நோற்று நாம்
மாபெரும் பயனைப் பெறுவோம்

பாட்டு

நல் வாழ்வினை அளிக்கும் நோன்பினை பிடித்தால்
நாளும் நன்மை நிறைந்தோங்கும்—வல்ல
நாயனின் அருளும் உண்டாகும்—என்றும்
நபி சொல் பாதைதனில் நடந்திட வேண்டும் (நல்)
வாழ்விலும் தாழ்விலும் எல்லோரும் நோன்பை
வழக்கமாய் பிடித்திடல் கடமை—அதை
வைக்காமல் விடுவது மடமை—நல்ல
வாய்மையும் மாறா மாண்பும் நோன்பால்
வற்றாதுப் பெருகிடும் நன்மை—அது
வாழ்விலும் உயர்த்திடும் நம்மை (நல்)
உண்ணல் குடித்தலை உலக போகத்தை
விலக்கி ஓர்மையுடன் திடமாக—நாம்
நோன்பு நோற்பதால் மேலாண்புமிக்கதோர்
உயர்வு கிடைத்திடும் நிஜமாக
நாளைக்கு நாமும் நாயன் சமூகத்தில்
நலிவுடன் நின்றிடும் போது—இந்த
நாநில வாழ்வும் சொத்தும் சுகமும்
நமக்கெதும் உதவி செய்யாது
தீனுக்குத் தூணாய் விளங்கும் கடமையை
தினம் தவறாமல் நாம் செய்ய வேண்டும்
நாளை காக்கும் நல்ல துணையாக—இன்று
நாம் செய்யும் நன்மையே நமக்குதவும் (நல்)
தீனிஸ்லாத்தின் உண்மைத் தொண்டராய்
திரு நபி வழியில் நடந்திடணும்
அரும் ரமலானில் முப்பது நோன்பையும்
தப்பாமலே நாம் நோற்றிடணும்
இறைநபி சொல்லை ஏற்று நடக்கணும்
இணைதுணையில்லா இறையை தொழுகணும்
இகமும் பரமும் உயர்ந்து விளங்கவே
ஈமானோடு நாம் இலங்கணும்—அமல்புரியணும் (நல்)

மாநிலம் மறக்க முடியாத மாவீரர்

எடிசன் சுட்டிக் காட்டிய கருவியைத் தயாரித்துக் கொண்டிருக்கும் பொழுது, அதைப் பற்றிய புதிரைப் புரிந்து கொள்ள க்ரூஸி முயற்சித்தார். மற்ற சிப்பந்திகள் அவரைச் சூழ்ந்து கொண்டு பற்பல ஊகங்களைச் செய்து கொண்டிருந்தனர். எனினும், அதன் உண்மையை உணர்ந்தவர் ஒருவரும் இல்லை. அக்கருவியைத் தயாரித்து முடித்து எடிசனிடம் எடுத்துச் சென்ற போது, ஆவல் கொண்ட கூட்டம் அங்கு கூடிவிட்டது.

க்ரூஸி கூறினார்: "அதோ, கருவி இருக்கிறது. இப்போதாவது அது எதற்கு என்று சொல்லுங்கள்."

"இந்தக் கருவி பேசவேண்டும். அது பேசும் என நீர் நினைக்கிறீரா" என்று எடிசன் வினவினார்.

இவ்வார்த்தைகளைக் கேட்டதும் க்ரூஸீ பிரமிப்படைந்தார்; மற்றவர் புன்னகை புரியாமல் உற்றுக் கவனிக்கலானார்கள். எடிசனுக்கு பின்னாலிருந்த ஒரு ஆள் தமது புருவத்தை நெளித்து "முடியாது" என்பதற்கு அடையாளமாகத் தலை அசைத்தார். அங்கிருந்தவர்கள் அனைவரும் அப்போது அவரைப் பற்றிக் கொண்டிருந்த அபிப்பிராயம் இதுதான்; முதியவர் (எடிசன்) எப்போதும் ஒருவித உன்மத்தம் பிடித்தவர். இப்போது அவருக்குச் சித்த சுவாதீனம் ஏற்பட்டு வருகிறதா?

உருளையைச் சுற்றி தகரத்தகடை அவர் கவனமாகச் சுற்றிக் கொண்டிருந்த போது அவரைப் பார்த்து அவர்கள் பரிதாபம் கொண்டனர். எந்திரக் கைப்பிடி முதல் முறையாகச் சுழன்றதும் தகட்டைக் குண்டூசி முனை கீறிக் கொண்டு சென்றது. 'கிறீச்' என்னும் சப்தம் அங்கு குழுமி யிருந்தவர்களின் காதுகளைத் துளைத்தது. எடிசனின் உன்னிப்பான பார்வை அவர்களைப் பீதிக்குள்ளாக்கியது.

கிழிந்த தகட்டுக்குப் பதிலாக மற்றொரு தகடை அவர் பொருத்தினார். ஆனால், இச்சமயம் அதன் முனைகளைப் பசைப் போட்டு கெட்டியாக ஒட்டினார். ஆரம்பஸ்தலத்தில் ஊசியை வைத்து, வாய்க் குழாயை எடுத்துக் கொண்டு கைப் பிடியைத் திருப்பிவிட்டார்.

"Mary had a little lamb
Its fleece was white as snow......"

என்னும் பாட்டை உரத்த குரலில் அவர் பாடினார். பாட்டு முடிந்ததும், ஆரம்பஸ்தலத்தில் ஊசியை மீண்டும் வைத்தார். எந்திரக் கைப்பிடியைத் திருப்ப ஆரம்பித்ததும் திடீரெனச் சுழலும் உருளையிலிருந்து அவரது குரல் எழுந்தது.

"Mary had a little lamb......"

பிரதிபலிக்கும் குரலைத் தவிர அந்த அறையில் வேறு சப்தம் எதுவும் கேட்க வில்லை; அமைதி நிலவியது; சிப்பந்திகளின் இருதயம் வெடித்து விடும் போலிருந்தது; அவர்களது உடம்பெல்லாம் வியர்த்து விட்டது. அவர்கள் இந்த அதிசயத்தைக் கண்டதும் தங்கள் மூச்சை அடக்கிக் கொண்டிருந்தனர் என்றே கூறவேண்டும். எடிசன்கூட சிறிது பிரமிப்படைந்தார். கிராமபோன் கண்டு பிடிக்கப் பட்ட விதம் இதுதான்.

அமெரிக்க சரித்திரத்திலே அதைப் போன்ற எந்த உபாயமும் இருந்ததாக அதுவரை எவரும் உரிமை கொண்டாடிய தில்லை. இக்கண்டு பிடிப்பைப் பயன்படுத்திக் கொண்டு மற்றவர்கள் அனுகூலம் அடைவதைத் தடுப்பதற்காக எடிசனுக்கு ஏகபோக உரிமை உடனே வழங்கப்பட்டது. ஆரம்பத்தில் ஒழுங்கற்றதாகவிருந்த கிராமபோனைப் பின்னர் எடிசனும் மற்றவர்களும் படிப்படியாக அபிவிருத்தி செய்தனர். உருளைக்கும் எந்திரக் கைப் பிடிக்கும் பதிலாக வட்ட வடிவமான தகடு பொருத்தப்பட்டது. கடிகாரத்தின் ஓட்டத்தால் இத்தகடு சுற்றப்பட்டது. தொனி பெருக்கி Mega Phone உதவியால் வெகு தூரம்வரை சப்தம் கேட்கச் செய்யப் பட்டது.

மனிதக் குரலைச் சேமித்து வைத்துப் பின்னர் அதைத் திருப்பி ஒப்புவிக்கக் கூடிய இந்த அபூர்வக் கருவியானது எங்கும் மக்களின் கவனத்தையும் கருத்தையும் கவர்ந்தது. இதனைக் கண்டு பிடித்தவரைப் பற்றிப் பல லட்சக்கணக்கான பதங்கள் பாருலகம் முழுவதும் கேபிள் மூலம் பரப்பப்பட்டது. அப்போது ஜீவித்திருந்த மற்றெந்த அறிஞரையும்விட தாமஸ் எடிசனின் பெயர் மிகப் பிரபல்ய மடைந்தது. அப்போது அவருக்கு வயது முப்பத்தொன்று. அவரது சங்கோஜ நடையும் பாவனையும் அவரது அருமையான பிரசங்கமும் அலங்கோலமான, அவலட்சணமான ஆடையும் சாதாரண எளிய சுபாவமும் பத்திரிகைகளில் பிரமாதமாக பிரசுரிக்கப் பட்டன. ஒவ்வொரு விஷயமும் பற்றி அவரது அபிப்பிராயம் அறிய அவர் அடிக்கடி பேட்டி காணப்பட்டார்; அவரைப் பற்றி விநோதமான விசித்திரமான கதைகளும் உலவிவரலாயின. பத்திரிகையில் தற்செயலாக வெளியான தலைப்பின் மூலம் "மென்லோ பார்க்கின் மந்திரவாதி" என்ற பெயர் அவருக்குச் சூட்டப்பட்டது. அவனியிலே அற்புதங்கள் செய்யக் கூடிய அபார அறிவு படைத்த அசாதாரண அறிஞராக அவர் இருந்தமையே இப்பட்டப் பெயர் நிலைபெற்றதன் காரணம். ஆனால் இப்பெயர் அவருக்கு அருவருப்பு அளித்தது. அவரது அருமை மைந்தர் கூறுகிறபடி, "மந்திரவாதியாவதற்காக வேறு எந்த மனிதரும் கடுமையாக உழைக்க வில்லை"

எடிசனின் பிரியமான கண்டு பிடிப்புகளில் கிராமபோன் ஒன்ருக விருந்தது. ஜீவிய காலம் முழுவதும் அதை அபிவிருத்தி செய்வதில் அவர் முனைந்திருந்தார். இறுதியில் கிராமபோன் சம்பந்த மாக எண்பது ஏகபோக உரிமைகள் கோரிப் பெற்ருர். கிராமபோன் அபிவிருத்தியில் அவர் காட்டிய அக்கரையால் அவருக்கு நல்ல லாபம் கிடைத்தது. 1910-ம் வருடத்துக்குள் கிராமபோன்கள், ரிகார்டுகள் ஆகியவற்றின் வருட விற்பனை எழுபது லட்சம் டாலராக அதிகரித்தது. கிராமபோன் பற்றிய ஏகபோக உரிமையின் காலம் கடந்து விட்ட பிறகும்கூட ரிகார்டுகளின் விற்பனை மூலம் அவருக்குக் கணிசமான வருமானம் கிடைத்து வந்தது.

எடிசன் செவிடராக விருந்தது கிராமபோன் பற்றிய அவரது பரிசோதனைக்கு இடைஞ்சலாக இருக்க வில்லை: மாருக, அதன் நாத சாஸ்திரத்தைப் பரிபூரணமாக்கச் செவிட்டுத் தன்மை உதவியாக இருந்தது என்றே கூற வேண்டும். சாதாரணமாகக் கேட்கும் சக்தி பெற்றிருப்பவர்களும் கண்டு பிடிக்க முடியாத குறைபாடுகளை கண்டு பிடித்துச் சீர்ப்படுத்தும் உபாயத்தை அவர் கையாண்டு வந்தார். உலகப் பிரசித்திப் பெற்ற பாடகர் (Violinist) ஒருவரின் இசைத் தட்டில் ஓரிடத்தில் அபஸ்வரம் இருப்பதாக எடிசன் கூறினர். இது முடியாத காரியம் என அப்பாடகர் வாதாடினர். அந்த இசைத்தட்டைப் பாடச் செய்து காட்டினர் எடிசன். விசேஷதொனி பெருக்கி பொருத்தப்பட்டிருந்தமையால் குரல் உரத்த தொனியில் கேட்டது. தகராறுக்குரிய பகுதி வந்ததும் அபஸ்வரம் காணப்பட்டது. இக்குறை பாட்டைக் கண்டதும் பாடகர் மூர்ச்சித்து விழுந்தார்.

தமது முப்பதாவது வயதுக்குள் நூற்றைம்பத்தேழு கண்டு பிடிப்புகள் குறித்து எடிசன் ஏகபோக உரிமை பெற்றிருந்தார். இன்னும் எழுபத்தெட்டு கருவிகள் பற்றி ஏகபோக உரிமை கோரிச் செய்திருந்த மனுக்கள் வாஷிங்டனில் பைசலாகாதிருந்தன. எனினும், எடிசன் வாளாவிருக்க வில்லை; தீவிர ஆராய்ச்சி—அவரது சொல்படி 'போர்' — நடத்தி வந்தார். மூன்று அல்லது நான்கு தினங்கள் வரை உணவு, உறக்க மின்றி உற்சாகத்தோடு உழைப்பார். களைப்பு ஏற்பட்ட பொழுது சிறிது நேரம் கண்ணயர்ந்து வேலையில் மீண்டும் தீவிரமாக ஈடுபடும் வல்லமை அவருக்கு இருந்தது. அவரது நண்பரொருவர் ஒரு சமயம் கூறியதாவது:—"மிகவும் சுறுசுறுப்பான வேலைக்கு இடையில்கூட 'ஸ்விச்'சைப் பொருத்தி விட்டு ஆழ்ந்த நித்திரை கொள்வார். பதினைந்து நிமிடங்களுக்குப் பிறகு, ஒரு புது மனிதராக (புத்துணர்ச்சி பெற்றவராக) அவர் எழுந்திருப்பார்."

(தொடரும்)

ஹஸ்ரத் ஷம்ஸ் தப்ரேஸ் அவர்களின் சரிதை

இதில் ஹஸ்ரத் ஷம்ஸ் தப்ரேஸ் அவர்களின் பிறப்பும் குழந்தை பருவமும், அவர்கள் மவ்லானு ரூம் அவர்களைச் சந்தித்ததும், இருவர்களுக்கு முள்ள சம்பந்தமும், ஹஸ்ரத் ஷம்ஸ் தப்ரேஸ் அவர்கள் கொலை யுண்டதும் விவரிக்கப்பட்டுள்ளது. அத்துடன் அவர்களின் குறைதிசயங்களும், அவர்களின் உபதேசங்களும் அடங்கியுள்ளன. விலை ரூ. 0–64

முதல்லல் கோஷா நாமா

கோஷா பர்தா விஷயத்தைப் பற்றி ஹக் தஆலாவின் கலாமாகிய தலீல்களிலும் நமது நபி நாயகமவர்களின் திரு மொழியாகிய ஹதீதுகளிலும் வந்திருப்பவைகளைக் கல்விக் கடல்களாகிய முஹத்திஸின்களும், முபஸ்ஸிரீன்களும், முஜ்தஹிதீன்களும் தெண்டித்து விபரித்தெழுதி யிருப்பவைகளில் சிலதை சுருக்கமாக சேகரித் தெழுதி **முதல்லல் கோஷா நாமா** வென்று பெயர் வைத்து தற்கால ஆலிம் மவ்லவிகளில் மஹான்களாகிய பத்து உலமாக்கள் பார்வையிட்டு அச்சிடப்பட்டது. இவைகளெல்லாம் வசனமாகக் கூறப்பட்டு இருக்கின்றன.

பின்பு இவைகளெல்லாம் சுலபமாக மனதில் வைத்து கொள்ளும் பொருட்டு பாடல்களாக போடப்பட்டு இருக்கின்றன.

இதன் விலை ரூ. 0–52

ஷை அறபுத் தமிழ் விலை ரூ. 0–80

கிடைக்குமிடம்:—

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்,

கெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதருஸ் 5.

சிறைப் பறவை சிப்கத்துல்லா

அல்லது

துப்பு துலக்கிய தூயவர்.

அத்தியாயம் 18.

தோட்டத்தில் நீண்ட பிரம்பு நாற்காலியில் காதர்கான் சாய்ந்து கொண்டிருந்தான். அவனுக்கு முன்பு கால்வாயில் நீலநீர் சலசல வென ஓடிக்கொண்டிருந்தது; வானத்திலும் மேகங்கள் நிழலிட்டிருந்தன. கையை நீட்டி, மேஜைமீதிருந்த கண்ணாடி டம்ளரை எடுத்து முகத்தை சுளித்த வண்ணம் யாரையோ பெயரிட்டு அழைத்தான். அவன் முன்பு ஜீனத்துன்னிஸா ஆஜரானுள்.

"இந்த பானத்தை எடுத்து விட்டு, விஸ்கியும் சோடாவும் கொண்டுவா."

"எலுமிச்சம்பழ ரசத்தைத் தவிர நீங்கள் எதுவும் சாப்பிடக் கூடாது என்று டாக்டர் சொல்லி யிருக்கிருர். அவர் சொல்லுகிற படிதான் நீங்கள் நடக்க வேண்டும்."

"நான் எழுந்திருந்தால் உனது மண்டையை உடைத்தெறிந்து விடுவேன். உன்னிடம் நான் சொல்லுகிறபடி நட. வீட்டுக் காரியஸ்தன் எங்கே?"

"சில கடிதங்களை தபாலில் அனுப்புவதற்காக கிராமத்துக்கு சென்றிருக்கிருன்."

இதுபற்றி அவன் சிந்தித்தான். பிறகு "அந்த துப்பறிவோன் வந்தால், அவனைப் பார்க்குமளவுக்கு எனது உடல்நிலை குணமாக வில்லை எனச் சொல்லி அனுப்பி விடு."

"யார்? இன்ஸ்பெக்டர் இனயதுல்லாகானு?"

"ஆம் அவன்தான். அருவருப்பான திருடன்! இனயத் துல்லாவை சரிகட்டியிராவிடில் இக்நேரம் சிப்கத்துல்லா 'மாமியார் வீட்டில்' இருந்து கொண்டிருப்பான்."

தாழ்ந்த நாற்காலியை அவன் பக்கமாக இழுத்துப் போட்டுக் கொண்டு அவன் அருகில் அவள் அமர்ந்து கொண்டாள்.

"அக்காரியத்தை சிப்கத்துல்லா செய்திருப்பார் யென்று நான் நினைக்கவில்லை. அது கரீமுல்லாகான்தான் என உங்கள் தந்தை அபிப்பிராயப் படுகிருர். பிறகு ஜன்னல் திறந்திருந்தது கண்டு பிடிக்கப்பட்டது. விபத்து வேளைகளில் தப்பிச் செல்வதற்கான வழியை அவர் பயன்படுத்திக் கொண்டிருக்கலாம்—அந்த வழி அவருக்குத் தெரியும்."

அவன் பெருமூச்சு விட்டு ஏதோ முணுமுணுத்தான். அவளும் தனது கருத்தை வற்புறுத்தாமல் விட்டு விட்டாள்.

"மரியம் எங்கே? தந்தையிடம் திரும்பிச் சென்று விட்டாளா?"

அவள், "ஆம்" என்றாள்.

"உன்னை நான் மணந்து கொண்டிருக்கிறேன் என்று அவளிடம் சொன்னது யார்?"

"எனக்குத் தெரியாது."

"கழுதை பொய் சொல்லுகிறாயா? அவளிடம் நீதான் சொல்லியிருப்பாய். வேறு எவருக்கும் இந்த விஷயம் தெரிந்திருக்காது; தெரிந்திருக்கவும் நியாயமில்லை. இந்த இரண்டாவது திருமணம் செய்து கொண்டமைக்காக நான் 'மாமியார் வீடு' செல்ல நேர்ந்தால் உன்னைக் கொன்று போடுவேன். என் இரகசியத்தை இரு தடவைகள் நீ வெளியிட்டு விட்டிருக்கிறாய்."

"நான் என்ன சொன்னேன் என்பது எனக்கே தெரியாது. கவலையால் நான் அரைப் பைத்தியமாக விருந்தேன்."

"நீ முழுப்பைத்தியமாக இருந்திருந்தால் மிகவும் நன்றாக இருந்திருக்கும்; எனக்கும் சந்தோஷமாக இருந்திருக்கும். பெண் அல்ல பிரதானம்; அதைப்பற்றிக் கவலைப்படவில்லை. எனது வயோதிகத் தந்தையைப் பொறுத்த விஷயம் அது; அதனை அவர் கவனித்துக் கொள்வார். எனது தொழில் சீர்குலைந்து வருவதுதான் எனக்குக் கவலையளிக்கிறது. அது ஒழுங்காகவும் கிரமமாகவும் நடக்காவிடில் எனக்கு ஆபத்து விளையும். இந்த இரகசியத்தை நீ வெளியிட்டு விடமாட்டாய் என்று எண்ணுகிறேன்."

"இல்லை, எனக்குத் தெரியாது."

"நீ இரகசியத்தை வெளியிடாததற்குக் காரணம் அதுதானா?" அவளை அவன் இகழ்ச்சியாகப் பார்த்தான். இப்போது அவள் சொன்னாள்:

"இதோ பாருங்கள். நான் பொறுமையின் பொக்கிஷம். ஆனால் பொறுமைக்கும் எல்லை-வரம்பு உண்டல்லவா? நீங்கள் அசௌக்கியமாக இருக்கும்வரை உங்கள் வெடுவெடுப்பான குணத்தையும் நடத்தையையும் சகித்துக் கொண்டிருப்பேன். ஆனால், நீங்கள் இப்போது வாழ்வது புதிய யுகம்; இந்த உண்மையை உணர்ந்து கொள்வது உங்களுக்கு நல்லது. என்னிடம் நீங்கள் கடுமையாக நடந்து கொண்டால் நானும் சிறிது கடுமையாக நடந்து கொள்வேன். பெண் தன்மைக்கு அது உகந்ததல்ல. ஆயினும், அதுதான் விவேகம் நிறைந்த செயலெனக் கருதுகிறேன். ஆண் பெண் சமத்துவத்தில் எனக்கு நம்பிக்கை இல்லை. ஆனால் சமயம் நேர்ந்தால்,

சந்தர்ப்பம் வாய்த்தால், நிர்பந்தம் ஏற்பட்டால் எந்த பெண்ணும் வீராங்கனையாக மாறி விடுவாள்.''

விவேகத்தோடு விவாதப் போக்கை மாற்றுவதற்கு அவன் முயற்சித்தான்.

"கிளப்பை அவர்கள் பரிபூரணமாகச் சோதனை யிட்டார்கள் என்று நான் நினைக்கிறேன்.''

"ஆம்.''

"மேல் அறையில் அவர்கள் சோதனை போட்டார்களா?''

"அப்படித்தான் என்று நினைக்கிறேன். எல்லா இடங்களையும் அவர்கள் குடைந்து பார்த்து விட்டார்கள் என்று பரீது சொன்னான்.''

"அவர்கள் விவேகமுள்ளவர்கள். விவேகமாக இருப்பது சாமானியமான செயலா? அது யார்?'' தோட்டத்தில் தோன்றிய விநோத மனிதனைப் பார்த்து ஊளையிட்டான் அவன்.

அந்த அன்னிய ஆடவரைச் சந்திப்பதற்காக ஜீனத் எழுந்து சென்றாள். அவள் அருகில் வந்ததும் அந்த மனிதர் முறுவலித்துக் கொண்டே சொன்னார்: "சிவ பூஜையில் கரடி புகுந்தது போல இந் நேரத்தில் நான் உத்தர வின்றி உள்ளே பிரவேசித்தது பற்றி வருத் தப்படுகிறேன். இது மிக நேர்த்தியான இடம், இல்லையா? இது இரசூல் இராவுத்தரின் இல்லமல்லவா? இராவுத்தரை எனக்குத் தெரியும்—அவர் மிக நல்ல மனிதர். அவரிடமிருந்து இவ்வீட்டை வாடகைக்கு எடுத்துக் கொண்டிருக்கிறீர்கள் என்று நினைக்கிறேன்.''

அவள் ஆச்சரியமும் அருவருப்பும் அடைந்தாள்.

"வீட்டைப் பற்றி விசாரிக்கிறீர்களே, அது பற்றி உங்களுக் கென்ன? எவரையாவது பார்க்க நீங்கள் வந்திருக்கிறீர்களா?''

"ஜனாப் காதர்கானைச் சந்திப்பதற்காக நான் வந்திருக்கிறேன்.''

"அவர் அசௌக்கியமாக விருக்கிறார். அவரைப் பார்க்க முடியாது.''

"நான் மிக வருத்தப் படுகிறேன்.'' அனுதாபத்தோடு அவர் சொன்னார்.

"சில விநாடிகள் எனக்கு அவர் பேட்டி யளிப்பாரா? அவரது உடல் நிலைபற்றி விசாரித்தறிவதற்காக நான் வந்திருக்கிறேன்.''

"உங்கள் பெயர் என்ன?''

"ரஜாக்—முஹம்மது ரஜாக்கான்.''

ஜீனத்தின் முகம் கருத்து விட்டது; கண்கள் இருண்டு விட்டன. அவசரமாக அங்கிருந்து அவள் கிளம்பினாள்.

"அவரை நான் கேட்டுப் பார்க்கிறேன்."

ரஜாக்கான் வந்திருக்கிறூர் என்பதைக் கேள்விப் பட்டதும் காதர் கானின் உதடுகள் உலர்ந்து விட்டன.

"என்னைப் பிடிப்பதற்காக பாங்குகள் அமர்த்தி யிருக்கும் ஆசாமி அவன்; அல்லது அரசாங்க அதிகாரியாகவே இருக்கலாம். அவனை உள்ளே வர விடு." அவன் மெதுவாகச் சொன்னான்.

கம்பீரமாக நடை போட்டுக் கொண்டு ரஜாக்கான் தோட்டத்துக் குள் பிரவேசித்தார்.

"நீர் மிக மோசமான நிலையில், அசௌக்கியமாக இருப்பதைக் கண்டு கவலைப் படுகிறேன்; வருத்தமடைகிறேன். உமது தந்தை சௌக்கியமாக இருக்கிறூர் என்று எண்ணுகிறேன்."

"ஓஹோ! அவரைப் பார்த்திருக்கிறீர்கள், இல்லையா?"

"ஆம், உமது தந்தையை நான் சந்தித்திருக்கிறேன். முன் யோசனையும் அறிவுக் கூர்மையும் மிகுந்தவர் அவர்."

தந்தையின் தகுதி, திறமை பற்றிய புகழ் மாலையைக் கேட்டு காதர்கான் அமைதியாக விருந்தான்.

"மிக ஈனமான தொழில் ஒன்று இரகசியமாக நடத்தப்படுவதாக பட்டணத்தில் பேசப் படுகிறது. உலகத் தொடர்பு இல்லாமல் தனித்து வாழும் நான்—வயோதிகனான நான்—கள்ள நாணய புழக்கம் பற்றிய விநோதமான வதந்திகளைக் கேள்விப் படுகிறேன். கள்ள நாணயத்துக்கு இகழ்ச்சியாக வழங்கப் பெறும் பெயர் 'கனு' வா அல்லது 'கானு' வா, இல்லை, இல்லை 'கனு' தான்."

"அதன் பெயர் 'கனு,'" காதர்கான் தெரிவித்தான். ஆச்சரியப் படுவதா அல்லது அவஸ்தைப் படுவதா என்பது தெரியாமல் விழித் தான் அவன். ரஜாக்கானையே முறைத்துப் பார்த்துக் கொண்டிருந் தான்.

"இந்த முறை கெட்ட, மோசமான தொழிலில் ஈடுபட்டிருப் போர் அவர்களது செயலினுல் விளையக் கூடிய பலா பலன்களை உணர்ந்து கொண்டிருக்க முடியாது என்பதை என்னால் நிச்சயமாகச் சொல்ல முடியும்."

பேச்சை இடையில் நிறுத்திக் கொண்டு தோட்டத்தின் மீது கண்ணேட்டம் செலுத்தி வித விதமான மலர்கள் பற்றி விமர்சனம் செய்யத் துவங்கினர்.

"இந்த உலகம் எவ்வளவு நேர்த்தியானது. இப்புஷ்பங்கள் தான் எவ்வளவு அழகாகக் காட்சி யளிக்கின்றன. மல்லிகையின் மணத்தை நுகர்ந்ததும் மனத்துக்கு மட்டற்ற மகிழ்ச்சி ஏற்படுகிறது. அதோ காணப்படுகிறதே, அது குண்டு மல்லி இல்லை போல் இருக்கிறது. ஆனல் அந்த ரோஜா—மலரும் மணமும்—எனக்கு மிகவும் பிடித்

திருக்கிறது. இங்கிருந்து கொண்டே அதன் அழகை ரசிக்க முடி கிறது.''

அவர் கண்களை மூடி, மூக்கைத் துடைத்து இரைச்சலுடன் தும்மினர். அவரது தோற்றம் விநோதமாக விருந்தது. ஆனல் காதர்கான் சிரிக்க வில்லை.

''எனக்குத் தெரிந்தது அற்ப சொற்பம் தான். ஆனல் டெஹ்ரா டன்னில் பூந்தொட்டியில் வளர்க்கப்படும் சில புஷ்பங்களே இருக் கின்றன. விசேஷ உரிமை பெற்ற ஒருவனைத் தவிர—மலர்ச் செடி களை வளர்க்கும் பொறுப்புள்ளவன்—மற்ற கைதிகள் எவரும் அவற் றைப் பார்க்க முடியாது. அந்த உரிமை பெற்றவன் பொதுவாக ஜீவிய கால தண்டனை பெற்றவனுகவே இருப்பான். மலர்கள் இல்லா வாழ்க்கை மணமற்றது.''

''மலர்களிடத்தில் நான் விசேஷ பிரீதி கொண்டவன் அல்ல''

''என்ன பரிதாபம்! மிகப் பரிதாபம்! அந்த இடத்திலிருந்து— சிறையிலிருந்து—கடற் காற்று வாங்க முடியாது; மலை மீது கண் ணேட்டம் தான் செலுத்த முடியும். உரிமையும் இருப்பதில்லை, உவகையும் இருப்பதில்லை. உண்மையில், பதினைந்து அல்லது இரு பது வருட கால தண்டனை பெற்றவனுக்கு வாழ்க்கை ரசிக்கச் செய்யத் தக்க எதுவு மில்லை.''

காதர்கான் பதிலெதுவும் சொல்ல வில்லை.

''கிளிகள் மீது உமக்கு பற்று, பாசம் உண்டா?''

''இல்லை, கிளிகளிடத்தில் எனக்கு பற்றுதல் இருப்பதாகச் சொல்ல முடியாது.''

ஜீனத் நிமிர்ந்து நின்ருள். அவளது புலன்களெல்லாம் கூர்மை யாகி, உன்னிப்பாகக் கேட்டுக் கொண்டிருந்தன.

ரஜாக்கான் பெரு மூச்சு விட்டார்.

''கிளிகளிடத்தில்— பஞ்சவர்ணக் கிளிகளிடத்தில் எனக்கு மிகுந்த அன்பு உண்டு. கூண்டில் அடைப்பட்ட கிளியைக் கண் டால் எனக்குப் பிடிக்காது. கூண்டில் வதியும் கிளியைக் கண்ட தும் உடனே அதனை விலைக்கு வாங்கி அதனைச் சுதந்திரமாகப் பறக்கவிட்டு விடுவேன். எனது இந்த இரக்கசிந்தை முட்டாள் தனமாகத் தோன்றலாம்; ஏனெனில், உரிமை யின்றிக் கூண்டிலே யே பிறந்து, கூண்டிலேயே வளரும் கிளியைப் பின்னர் விடுதலை செய்தால் வானத்திலேயே சஞ்சரிக்கும் முரட்டுக் கிளிகளிடையே தாக்குப் பிடிப்பதற்கு அவசியமான தன்மைகளையும் சக்தியையும் அது பெற்றிருக்காது. ஆனல், கிளிகளைச் சுதந்திரமாகப் பறக்க விடுவதில் எனக்கு அலாதி பிரியமுண்டு; மற்றவர்கள் கிளிகளைக் கூண்டில் அடைத்து அகமகிழ்கின்றனர்.'' காதர்கானின் முகத்

187073

துக்கு நேராக விரலைச் சுட்டிக்காட்டி அவர் மேலும் சொன்னார்: "கூண்டில் அடைப்பட்ட கிளியாக இருக்காதீர்– ஆம், கூண்டில் அடைப்பட்ட கிளியாக இருக்காதீர்."

"நான் கிளியுமில்லை, பூனையுமல்ல என்னை அடைத்துவைப் பதற்கான கூண்டு இன்னும் கட்டப்படவில்லை."

ரஜாக்கான் மீண்டும் நீண்டதொரு பெருமூச்சு விட்டார்.

"சில வருடங்களுக்கு முன்பு மற்றொரு கனவான் அவ்வாறு சொன்னதாக எனக்கு ஞாபகம் வருகிறது. அவர் எந்த சிறை யில் தூக்கிலிடப்பட்டார் என்பதை நான் மறந்து விட்டேன். அது பாதாளச் சிறையாக இருக்கலாம். அன்றொருநாள் அவரது கப்றை நான் பார்த்தேன். அவரது பெயரின் முதல் எழுத்துக்கள் தான் பொறிக்கப்பட்டிருந்தன. என்ன பரிதாபம்! எதிர்காலத்தில் பிரகா சிக்கக்கூடிய அந்த மனிதரின் முடிவு பரிதாபகரமானது. இருபது வருட காலம் சிறையில் வதிந்து வாடுவதைவிட அவருக்கு எற் பட்ட முடிவு மிக மேலானது என்று நான் நினைக்கிறேன்: சீர் திருந்த வேண்டுமென்ற தீர்மானம் கொண்டவனுக்கு இக்கதி நே ராது. அவன் 'இந்திய ரிசர்வ் பாங்க்' நோட்டுக்களைப்போன்று கள்ள நோட்டுகள் அச்சிடுகின்றான் என்று வைத்துக் கொள்வோம். காகிதங்களையும் நீர்க்குறியிடும் இயந்திரத்தையும் இதர தளவாட சாமான்களையும் தகர்த்தெரிந்துவிட்டு ஏஜெண்டுகள் எல்லோரையும் நீக்கிவிட்டுச் சீர்திருந்திவிட வேண்டுமென அவன் விரும்பினால் நாங்கள் என்ன செய்வோம் என்று நினைக்கிறீர்? அம்மாதிரி மனம் திரும்பிய மனிதனை மாண்புடன் வரவேற்று உபசரிப்போம். அவ னது நோட்டுகள் நல்ல நோட்டுகள் போலவே இருந்து சாமானிய மனிதர் எவரும் எளிதில் கண்டு பிடிக்க முடியாத வகையில் இருந் தால் அதற்காக அவனைப்பாராட்டிப் போற்றுவோமே யன்றி அவ னைப் பற்றிக் கவலைப்படவே மாட்டோம்."

"தௌலத் கானுக்கு என்ன நேர்ந்து விட்டது." காதர் கான் தைரியமாகக் கேட்டான்.

ரஜாக்கானின் கண்களில் ஒளி ஏற்பட்டது.

"தௌலத் கான் எனக்கு முன்பு பதவியில் இருந்தவர். கவர்ச்சி கரமான கனவான் அவர். சில தகவல்களின்படி............"

காதர்கான் அவர் மேற்கொண்டு பேசாமல் தடுத்து, வினவினான்: "கள்ள நாணய தயாரிப்பு பற்றி உளவறிந்த உத்தியோகஸ்தர் அல்ல வா அவர்? அவர் இறந்து விட்டாரா?"

"அவர் வெளி நாடு சென்றிருக்கிறார். ஆம் தௌலத் கானால் இந்த கோடை உஷ்ணத்தைச் சகித்துக்கொண்டிருக்க முடிய வில்லை. க்ஷயரோகத்தால் கஷ்டப்பட்ட அவரை நீர் எப்போதாவது பார்த் திருக்கிறீரா? ஓ! நீர் பொன்னான வாய்ப்பை நழுவ விட்டுவிட்டீர்.

தௌலத் கான் மிக நல்ல மனிதர். உத்தியோகத்தில் திறமையாக இல்லா விட்டாலும் குணத்தால் தங்கம் போன்றவர். என்னைப்போல பகிரங்கமாக அவர் வேலை செய்யவில்லை. அவரது வேலை முறை தவறானது என்பது எனது எண்ணம். இருந்த இடத்தில் இருந்து கொண்டே இரகசியமாக வேலை செய்வதால் என்ன துப்பு கிடைத்து விடப்போகிறது. இக்குற்றத்துக்கு– தவறுக்கும் நானும் இலக்காகி, இரையாகி இருந்திருக்கிறேன். நான் சொல்லிய உபமானத்தை ஆழ்ந்து யோசித்து அமல் செய்வீர் என்று எண்ணுகிறேன்."

"கள்ள நோட்டுத் தயாரிப்பவனாக நான் இருந்தால் அவ்வாறு செய்வேன். துரதிர்ஷ்ட வசமாக, கள்ள நோட்டு தயாரிப்பவன் நானல்லவாதலால் உங்கள் புத்திமதியின்படி நடக்க முடியாத நிலையில் இருக்கிறேன்."

"வாஸ்தவத்தில், நீர்இல்லை. நீர் கள்ள நோட்டு தயாரிப்பவர் என்று சொல்லலாமெனக் கனவிலும் கருதுவதில்லை. ஆனால் எண்ணிக்கையிலடங்காத நண்பர்களைப்பெற்றிருக்கிறமையால் எனது அந்த சிறிய உபமானத்தை உபதேசிப்பீர் என்று நிச்சயமாக நம்புகிறேன். கூண்டில் அடைப்பட்ட கிளிகளைப் பார்ப்பதற்கு நான் விரும்புவதில்லை. இரும்புக் கிராதிக்குள் எந்த உயிருள்ள பொருளும் இருப்பது எனக்குப் பிடிக்காது. டெஹ்ராடன் சிறை சுகாதாரத்துக்கு இலாயக்கற்ற இடமாக இருக்கிறது. சரி நான் வருகிறேன்ஸலாம்"

ஜீனத்திடமும் விடைபெற்றுக் கொண்டு அவர் அங்கிருந்து கிளம்பினர். பார்வையிலிருந்து மறையும் வரை அவரையே அவர்களிருவரும் பார்த்துக் கொண்டிருந்தனர். (தொடரும்)

ஹஸ்ரத் நாகூர் மீரான் ஸாஹிபு ஆண்டவர்கள் காரண சரித்திரம்

புதிய மூன்றும் பதிப்பு

இது ஹஸரத் ஸையிது அப்துல் காதிர் ஷாஹுல் ஹமீது மீரான் ஸாஹிபு ஆண்டவர்களின் ஜீவியமும், அவர்களின் அற்புதமாகிய கருமத்துகளும் ஒருங்கே நிறைந்தது. இது நேர்த்தியான காகிதத்தில் அச்சிடப்பட்டு அழகான பைண்டு செய்யப்பட்டது. விலை ரூ. 2–40

கிடைக்கு மிடம்:—

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்,
நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

அஹ்காமுல் முஸ்லிமீன்

(ஹனபி ஷாபியீ இரு மதுஹபுகளுக்கும்

தனித்தனி புஸ்தகம்)

கலிமாக்கள், ஈமான், இஸ்லாம், உலு, முழுக்கு, ஹைலு, நிபாஸு, தண்ணீர், தயம்மம், நஜீஸு, தொழுகைகளின் வக்துகள், தொழுகைகளின் வரிசைகள், தொழுகையை விட்டவனுடைய வேதனை, தொழுகையின் பறுலுகள், தொழுகிற ஒழுங்கு, ஜமாஅத்துடன் தொழுகிற வரிசைகள், வித்று தொழுகை, கபில் தொழுகை, தருவீஹ் உடைய வரிசைகள், ஜும்ஆ உடைய வரிசைகள், மையத்துடைய விஷயங்கள், ஸகாத்தின் பயான், நோன்புடைய வரிசைகள், ஹஜ்ஜுடைய வரிசைகள், நபி நாயகம் (ஸல்) அவர்களின் ரவுலா ஷரீபை ஸியாரத்துச் செய்கிறது ஆகிய இந்த விஷயங்களைப் பற்றி பேசும் பாடங்கள் இதில் நிறைந்திருக்கின்றன.

இவைகள் அல்லாமல் இன்னும் எண்ணற்ற விஷயங்கள் இந்த புஸ்தகத்தின் தக்மிலா என்று சொல்லப்படும் பாகத்தில் கூறப்பட்டிருக்கின்றன.

ஹனபி மதுஹபிற்குரியது தமிழ்—அறபி வார்த்தைகள் அறபியிலும் சேர்க்கப்பட்டது. விலை ரூ. 1—00

ஷை அறபுத் தமிழ் போட்டோ அச்சு கலிகோ பைண்டு விலை ரூ. 1—80

ஷை தமிழ் ஷாபி மதுஹபுக் குரியது—அறபி வார்த்தைகள் அறபியிலும் சேர்க்கப்பட்டது விலை ரூ. 1—00

ஷை அறபுத் தமிழ் போட்டோ அச்சு ஷாபி மதுஹபுக் குரியது கலிகோ பைண்டு விலை ரூ. 1—80

கிடைக்குமிடம் :—

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்

நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதருஸ் 5.

தொழுகை பற்றிய சில ஹதீது ஆதாரங்கள்

((ரஹ்மத் பாகவி))

ஜமாஅத் சேர்ந்து நிற்குங்கால், தோளோடு தோள் சேர்த்தும் பாதங்களோடு பாதங்கள் சேர்த்தும் செவ்வையாக அணிவகுத்து (ஸப் கட்டி) நிற்க வேண்டியது ஸுன்னத்தாகும்.

இமாம் சாஹிப், நடு மத்தியில் நிற்க வேண்டியதும், (முக்ததீகள்) ஸப்பில் பிளவு இல்லாது அடைத்துக் கொண்டு நிற்பதும் ஸுன்னத் ஆகும்.

யாரேனு. மொரு தொழுகையாளி, இரைந்து ஓத வேண்டிய கிராஅத்தை (தனிமையில்) மெதுவாகவே ஓதித் தொழுதுக் கொண்டிருக்கும் போது, யாரேனும் முக்ததீயாகி, அவருக்குப் பின்னால் வந்து நின்று கொண்டால், (ஓத வேண்டியதை) அங்கிருந்து அவர் இரைந்து (சப்தமிட்டே) ஓதத் தொடங்கு வாராக. எனவே ஓதி முடித்ததை திரும்ப ஓத வேண்டியதில்லை.

ஒரு பெண், வீட்டிலுள்ள மற்றெல்லோரை விட குர்ஆனை நல்ல விதமாக ஓதத் தெரிந்திருந்தால், அப் பெண் இமாமாக நின்று ஜமாஅத்தை நடத்தி வைக்கலாம்; அப் பெண் (இமாமு)க்குப் பின்னால், சிறுவர், அடிமைகள் யாவரும் முக்ததீயாக நின்று தொழலாம்.

= நபிகள் நாயகம் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் (ஒரு முறை) ஹுஜ்ராவுக்குள் இருந்து தொழுதுக் கொண்டார்கள்; அப்போது ஸஹாபாக்கள் அறைக்கு வெளியே யிருந்து, பின்பற்றி (ஜமாஅத்தாக) தொழுதுக் கொண்டார்கள்.

ஜமாஅத்து தொழுகையின் நன்மை

° '(முஸ்லிம்களே) நீங்கள் கூட்டமாய்ச் சேர்ந்து தொழுதுக் கொள்பவர்களுடன் (சேர்ந்து) தொழுதுக் கொள்ளுங்கள்' (குர்ஆன் வசனக் கருத்து)

"ருகூஉ செய்பவர்களுடன் ருகூ செய்யுங்கள்" (என்பதும் குர்ஆன் சொற்களின் சாதாரண மொழிப் புரையாகும்)

= அபூதாவூத்; மிஷ்காத்

° அ 1-வது ஜுஸு: ஸூரா பக்ரா

* நபிகள் நாயகம் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் திருவுளமா யிருப்பதாவது:— "ஜமாஅத்துடன் தொழுதுக் கொள்வதானது, தனித்து தொழுதுக் கொள்வதைக் காட்டினும் இருபத்தேழு பங்கு உயர்தர பதவி யுடையதாகும்."

+ மேலும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் திருவுளமா யிருப்பதாவது: தொழுதுக் கொள்ளக் கூடியவர், ஜமாஅத்துடன் சேர்ந்து தொழுதுக் கொள்வதற்காக நாடி, ஜமாஅத்து(க்கு ஜனங்கள்) கூடட்டும் என்பதற்காக காத்து உட்கார்ந்திருந்தால், தக்பீர் சொல்லப் படுகிற வரை அவர் தொழுகையில் இருப்பவராகவே கருதப்படுவார்.

ஜமாஅத்தில் சேர்ந்துக் கொள்வதற்கு, ஓட்டமாய் ஓடிச் செல்வது கூடாது. எனவே, அமைதியோடும் திருப்தியோடும் ஜமாஅத்தில் போய் சேர்ந்துக் கொள்ள வேண்டும். எத்தனை ரக்கஅத்து (ஜமா அத்தில்) கிடைக்கிறதோ அதை நிறைவேற்ற வேண்டும். விட்டுப் போனதை, இமாம் சலாம் சொல்லித் திரும்பிய பின் நிறைவேற்ற வேண்டும்.

‖ யாரேனு மொருவர், (உடல், உடை) பரிசுத்தமாக யிருந்து, நல்ல விதமாக ஒலுவு செய்து கொண்டு, மஸ்ஜிதுக்கு புறப்பட்டுப் போனால், அல்லாஹு தஆலா, அவர் நடந்து செல்லும் ஒவ்வொரு அடிக்கும், அந்த அடியை பூமியில் வைத்து எடுப்பதற்கு முன்னு லேயே, ஒவ்வொரு நன்மை விகிதம் எழுதுகின்றான்; அத்துடன் ஒரு பாபத்தையும் நீக்கி அருள்கின்றான்.

† அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத் (ரலி) அறிவிக்கும்ரிவாயத்து:- யாரேனு மொருவர், கியாமத்து நாளில், இஸ்லாத்திலுள்ள நிலையில் அல்லாஹு தஆலாவை தரிசிக்க வேண்டு மென்று ஆசைப்பட்டால், அவர் எப்போதும் ஜமாஅத்துடன் சேர்ந்து தொழுதுக் கொள் வாராக. ஏனெனின், அல்லாஹு தஆலா, உங்கள் திரு நபி நாதர் (ஸல்) அவர்களுக்காக சன்மார்க்க ரீதிகளை ஏற்படுத்திக் கொடுத்திருக் கிறான். எனவே ஜமாஅத்துத் தொழுகையும் அந்த சன்மார்க்க ரீதிகளில் உள்ளதாகும். ஜமாஅத்துடன் சேர்ந்து தொழுவதை வழக்கமாக விட்டு வீட்டிலேயே தொழுதுக் கொள்கிறவனைப் போல், நீங்களும் வீட்டிலேயே தொழுதுக் கொள்ளத் தொடங்குவீர் களாயின், நீங்கள் உங்கள் திரு நபி (ஸல்) அவர்களுடைய சன் மார்க்க ரீதியை விட்டுப் போட்டவராவீர்கள். எனவே, நீங்கள் கட் டாயம் வழிக் கேட்டிலாய் விடுகிறீர்கள்.

---

* ஸஹீஹைன், மிஷ்காத்
+ முஸ்லிம், மிஷ்காத்
‖ முஸ்லிம், மிஷ்காத்
† முஸ்லிம், மிஷ்காத்

மேலும், அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊது (ரலி) சொல்லியிருப்பதாவது :—நாங்கள் எல்லோரும் ஜமாஅத்தில் சேர்ந்து தொழுதுக் கொள்பவர்களாக இருந்தோம். ஆனால் பகிரங்க 'முனாபிகாக' இருந்த ஒரு நோயாளி, ஜமாஅத்துக்கு வந்து சேரும் வழக்க மில்லாதவனாக இருந்து வந்தான். எனினும் திடீரென்று அந்த இயலாத நோயாளிஇயன்றமட்டும் முயன்று, இரண்டு பேர்களுடைய தோள்கள் மீது கை போட்டு ஊன்றிக் கொண்டு நடந்து வந்து, ஸப்பு (அணி) களில் நின்று கொள்வான்.

*நபிகள் நாயகம் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் ஜமாஅத்துக்கு ஜனங்கள்வந்து சேர்வதற்காக, பிரத்தியேகமாய் ஏற்பாடு செய்யக்கூடியவர்களா யிருந்தார்கள். உதாரணமாக: அப்துல்லாஹ் இப்னி உம்ம மக்தூம், கண் குருடான ஒரு ஸஹாபியாக இருந்தார். அவரை கைப்பிடித்து (பள்ளி வாசலுக்கு) அழைத்து வருகிறவர் யாருமில்லை. எனினும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அந்தஅந்தகரைக் கூட, ஜமா அத்தில் வந்து சேர்ந்துக் கொள்ளும்படி உத்தா விடுகிறவர்களா யிருந்தார்கள்.

×நபிகள் நாயகம் (ஸல்) திருவுளமானதாவது :—இஷாத் தொழுகையும், ஸுப்ஹுத் தொழுகையும் முனாபிகுகளுக்கு மிகவும் சிரமமான காரியமாய் இருக்கும். ஆனால், அவர்கள் அந்த நேரத் தொழுகைகளிலுள்ள நன்மையைத் தெரிந்து கொள்வார்களானால், (நடக்க முடியாவிடினும்) முட்டுக்கால் தேய்த்துக் கொண்டாவது வந்து, ஜமாஅத்தில் சேர்ந்துக் கொள்வார்கள்.

†மேலும் நபிகள் நாயகம் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் திருவுளமா யிருப்பதாவது :—சௌக்கியமாகவும், சௌகர்யமாகவும் இருக்கும் மனிதர், தங்கடமொன்றும் ஏற்படாதிருக்க, ஜமாஅத்தில் சேர்ந்துக் கொள்ளவில்லையானால் அவருடைய தொழுகை நிறைவேற மாட்டாது.

‡"என்றைக்கேனும் இரவில் கடுமையான குளிரோ, கடுமையான மழையோ ஏற்பட்டு விட்டால், அப்போது நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், முஅத்தினை அழைத்து "ஜனங்களை அவரவர்கள் வீட்டிலேயே தொழுதுக் கொள்ளும்படி அறிக்கை செய்து விட்டு வாருங்கள்" என்று சொல்லி அனுப்புவார்கள்.

÷வழியில் பகைவனுடைய பயம், அல்லது எதிரியுடைய அச்சம் இருந்தால், அல்லது வியாதிக் கஷ்டமா யிருந்தால், அல்லது

* முஸ்லிம், மிஷ்காத்
× அபூதாவூத்: நஸாயி, மிஷ்காத்
† அபூதாவூத், தார்குத்னீ, மிஷ்காத்
‡ புகாரி, முஸ்லிம் மிஷ்காத்
÷ தார்குத்னீ, மிஷ்காத்

வேறேதும் ஒப்பத்தக்க தங்கடம் ஏற்பட்டு விட்டால், அச்சமயம் ஜமா அத்தை விட்டு விடுவதில் குற்றமில்லை.

*சிறு நீர் செய்ய வேண்டிய-அல்லது மலம் கழிய வேண்டிய அவசியம் (ஹாஜத்து) இருந்தால், அல்லது உண்ண உணவு எதிரில் வைக்கப்பட்டு விட்டால், அத்துடன் பசியும் கடுமையாக யிருந்து வாட்டினால், அவர் இந்தக் காரியங்களை (ஹாஜத்துகளை) செவ்வனே முடித்துக் கொண்டு, நிம்மதியாக ஜமாஅத்திலோ தொழுகையிலோ ஈடுபடலாம்; இது ஜாயிஸ் ஆகும்.

÷ பர்லான தொழுகைக்கு (இமாம்) தக்பீர் கட்டியான பிறகு, வேறெந்தத் தொழுகையும் நிறைவேற்றுவது ஜாயிஸ் ஆகமாட்டாது. மேலும், யாரேனுமொருவர், பர்லான தொழுகை, அல்லது நபில் முதலியன தொழுதுக் கொண்டிருக்கும் போது, ஜமாஅத்துக்கு இகாமத்து (தக்பீர்) சொல்லியாய் விட்டால், அவர் உடனே தம் நிய்யத்தை (ரக்க அத்தை) முடித்து விட்டு, ஜமாஅத்தில் சேர்ந்து கொள்ள வேண்டும்; இன்றேல் பாவியாகி விடுவார்.

× பாங்கு சொல்லப்பட்ட பிறகு (தொழாமல்) மஸ்ஜிதைவிட்டு வெளியே புறப்பட்டுப் போவது ஜாயிஸ் ஆகமாட்டாது; காத்திருந்து ஜமாஅத்துடன் தொழுதுக்கொள்ள வேண்டும். ஆனால், இந்த மனிதர், இன்னொரு மஸ்ஜிதுடைய இமாமாக இருந்தால், அல்லது இந்த மஸ்ஜிதுடைய இமாம், பித்அத்துக்காரராகவோ ஹதீதுகளை நிராகரிக்கக் கூடியவராகவோ இருந்தால், அல்லது இந்த மஸ்ஜிதில் ஏதேனும் பித்அத்தான அனுச்சாரம் நடப்பதாக இருந்தால், இப்படிப் பட்ட தங்கடமான காரணங்களைக் கொண்டு, பிரஸ்தாப மஸ்ஜிதை விட்டு வெளியே போய்விடுவது ஜாயிஸ் ஆகும்.

(தொடரும்)

---

* ஸஹீஹைன், மிஷ்காத்
÷ முஸ்லிம், மிஷ்காத்
× அஹ்மத், மிஷ்காத்

18703

Edited by M. S. ABDUL KHUDUS.
Published by Hajee M. A. Shahul Hameed & Sons.
Printed at Shahul Hameedia Press, Madras.

தாரீகுல் குலபா

இஸ்லாமிய கலீபாக்களின் அரசாங்க சரித்திரங்கள்

நமது இஸ்லாமிய கலீபாக்களின் சரித்திர விஷயங்களைத் தெரிந்து கொள்ள வேண்டியது எல்லா முஸ்லிம்களுக்கும் அத்தியாவசியமான கடமை யாகும். ஏனெனில் இச்சரித்திரங்களில் இஸ்லாமின் ஆரம்பமும், இஸ்லாத்தை நிலை நாட்டிய தத்துவங்களும், இஸ்லாத்தின் பக்தி விசுவாசங்களும், இஸ்லாத்தின் சமத்துவங்களும், இஸ்லாத்தின் நீதி பரிபாலனங்களும் ஒருங்கே நிறைந்திருக்கின்றன. ஆதலின் இம்மகிமை பொருந்திய சரித்திரங்களை ஒவ்வொரு முஸ்லிமும் முஸ்லிம் அல்லாதாரும் அவசியம் வாசிக்க வேண்டும்.

இதில் முதற் பாகமாக நம் நபி பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் சரித்திரமும், முதல் கலீபாவாகிய ஹஸரத் அபூபக்கர் ஸித்தீக் றலியல்லாஹு அன்ஹு அவர்களின் சரித்திரமும் அடங்கியது. கிளேஸ் காகிதத்தில் கிரௌன் 8-பேஜ் ஸைஸில் அச்சிடப்பட்டு பைண்டு கட்டியது. விலை ரூ. 1–60

மேற்படி இரண்டாவது பாகம்: இதில் ஹஸரத் உமர் றலியல்லாஹு அன்ஹு அவர்களின் சரித்திரமும் விரிவாய் எழுதப் பெற்றது. விலை ரூ. 1–32

மேற்படி மூன்றும் பாகம்: இது ஹஸரத் உஸ்மான் (றலி) அவர்களின் கிலாபத்தும், ஹஸரத் அலி (றலி) அவர்களின் கிலாபத்தும், ஹஸரத் இமாம் ஹஸன் (றலி) அவர்களின் கிலாபத்தும், பனீ உமையாவின் கிலாபத்தும், அப்துல் மலிக் அவர்களின் கிலாபத்தும் ஆக 5-கிலாபத்து ஆட்சி வரலாறுகள் அடங்கியது. விலை ரூ. 1–32

ஷை மூன்று பாகமும் சேர்ந்தது விலை ரூ. 3–60

கிடைக்குமிடம்:—

ஹாஜி எம். எ ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்

நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

யூனானி வைத்திய முறைகள்.

(தமிழில்)

இந்த புஸ்தகம் பல உர்து கிதாபுகளிலிருந்து சேகரிக்கப்பட்டு தமிழில் மொழி பெயர்த்து எழுதப்பட்டது.

இதில் மனிதனுக்கு வரக்கூடிய நோய்களை பல தலைப்புகளுக்கு அடியில் சேர்க்கப்பட்டு, ஒவ்வொரு தலைப்புக்கும் அடியில் வரும் அநேக நோய்களுக்கும் பலவித மருந்துகள் கூறப்பட்டு இருக்கின்றன. இந்த மருந்துகள் நமது வீட்டிலேயே செய்ய செலவின்றி தயாரித்துக் கொள்ளக்கூடியவைகள். இதில் கூறப்பட்ட தலைப்புகள்:—

சிரசு சம்பந்தப்பட்ட நோய்கள், சரீர சம்பந்தப்பட்ட நோய்கள், தாது சம்பந்தப்பட்ட நோய்கள், பல்வேறு விஷயங்களுக்கு பல்வேறு சிகிச்சைகள், மூலத்திற்கு பல்வேறு பாகங்கள், கழுத்து சம்பந்தப்பட்ட நோய்கள், காச சம்பந்தப்பட்ட நோய்கள், தோல் சம்பந்தப்பட்ட நோய்கள், பல்வேறு நோய்கள்.

இதில் குறிக்கப்பட்ட எல்லா நோய்களுக்கும் மருந்துகள் சொல்லப்பட்டிருக்கின்றன. சில விடங்களில் ஒரே நோய்க்கு சுமார் 40, 50. மருந்துகள் வரை விவரிக்கப்பட்டு இருக்கின்றன.

இந்த புஸ்தகம் ஒவ்வொரு வீட்டிலும் இருக்க வேண்டியது என்று சொல்ல அவசியம் இல்லை. 282-பக்கங்களைக் கொண்டது. கலிகோ பைண்டு செய்யப்பட்டது.

இதன் விலை ரூபா. 3

கிடைக்குமிடம்:—

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்

நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ்—5.